REGD. NO. M. 4283.

தமிழணங்கு

ஒரு மதிமுகத் தாள்.

தாரண — மாசி

மலர் ௪.] [இதழ் ௨.

தமிழரண், ஆம்பூர், (வ. ஆ.)

விலை 3 அணா.

உள்ளுறை.

எண்	பொருள்	பக்கம்
1.	தமிழணங்கு வாழ்த்து	... 41
2.	தமிழணங்கு வணக்கம்	... 41
3.	தமிழணங்கு வணக்கத்தின் அருஞ்சொல் விளக்கம்	... 42
4.	அணங்கின் ஆக்கம்	... 43
5.	திருவாய்மொழி விளக்கம் (வித்வான் திரு A. பூவராகம் பிள்ளை அவர்கள்)	... 45
6.	புலவரும் புரவலனும் (திரு G. சௌந்தரபாண்டியன் அவர்கள்)	... 50
7.	சோழநாட்டின் எல்லை	... 51
8.	பழந்தமிழ்மக்கள் போர்முறை (திரு. S. முத்துக்கிருட்டின நாட்டார் அவர்கள்)	... 52
9.	குறிஞ்சிப் பாட்டு (திரு. I. D. தங்கசாமி அவர்கள் B.A)	... 56
10.	வாழையின் வண்மை (திரு. G. இராஜகோபாலப் பிள்ளை அவர்கள் F.R.H S)	... 60
11.	கமலேநாதன் (சங்கரி)	... 63
12.	மாதர் வெளியீடுகள் (திருமதி S. லக்ஷ்மி)	... 66
13.	ஆரணத் தமிழ்மறை (வித்வான் திரு. K. S. சிவராம ஐயரவர்கள்)	... 67
14.	அருளுரைகள் (விவேகானந்தர்)	... 69
15.	நல்லவை நாற்பது (திரு. அ. இளங்கோவன் அவர்கள்)	... 70
16.	பொருந்துமா? திருந்துமா?	... 72
17.	மனத்திற்கிசைந்த மணம் (மலர்க்கொடி)	... 73
18.	அம்மா கேள்! (திரு. அ. கி. பரந்தாமனார் அவர்கள்)	... 76
19.	மதிப்புரை	... 77
20.	செய்தித் திரட்டு	... 78

தமிழணங்கில் எழுதப்பெறும் கதைகளில் வரும் பெயர்கள் யாவும் புனைபெயர்களாம், அவை ஒருவரையும் குறிப்பனவல்ல.

உ

தாய்மொழி தழைக! தாயகம் வாழ்க!!

தமிழணங்கு.

ஒரு மதிமுகத் தாள்.

"அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே."

மலர் ச. | தாரண — மாசி. | இதழ் உ.

வாழ்த்து.

மன்னவன் செங்கோல் வெல்க! மழைவளம் வழாது பெய்க!
மன்னுயிர் அனைத்தும் உய்க! மாநிலத் தமைதி மல்க!
அன்னமேன் னடையார் கற்பா ரணிதமி ழணங்கு வாழ்க!
தன்னிகர் தமிழ்வாழ் வோங்கித் தமிழரண் விளங்க! நன்றே!

தமிழணங்கு வணக்கம்.

பிழையறத் தெரிந்தொழுகு பெரியர்செம் மனமெனும்
பீடமா மாட ரங்கிற்
பேசரிய புலமையாம் புயல்மிகக் கண்டுமகிழ்
பீலிக் கலாப மயிலே!
பழையநின் னியல்சொலுஞ் செஞ்சொலா ரணமெனும்
பஞ்சரங் கொஞ்சு கிளியே!
பாகொடு சருக்கரை வருக்கைமுக் கனியெனும்
பதத்தினி லினிக்கு மமுதே!
மழையென்று வருமென்று வயலினெடி தேனின்று
வருந்தியண் ணாந்த பயிர்போல்
மன்னுமுன் னருள்வேண்டி வாடினே னினதுபொன்
மலர்த்தாள் பரவ அருள்வாய்!
இழையணி யணிந்தநூ லிடையொளிர் மடந்தையே!
என்னைஇனி தருளன் னையே!
இலங்குமுத் தமிழரண் விளங்கநன் மணங்கமழ்ந்
திணங்குசெந் தமிழணங்கே!

ஆ. மா. சிவஞானம்.

தமிழணங்கு வணக்கத்தின் அருஞ்சொல் விளக்கம்.

ஆடரங்கு — நடனமேடை; பீலிக்கலாபம் — பீலியாகிய கலாபம், தோகை; ஆரணம் — வேதம்; பஞ்சரம் — கிளிக்கூடு; வருக்கை — பலா; வருக்கை மூக்கனி — வருக்கையை உள்ளிட்ட முக்கனி. அவை மா, பலா, வாழை என்பன. பதம் — பக்குவம், சொல்; பொன் மலர்த்தாள் — அழகிய மலர்போன்ற திருவடி, பொன்போலும் தகுதிவாய்ந்த மலராகிய இவ்விதழ். பாவ — வணங்க, மிகுதியாக; இழையணி அணிந்த — புலவரால் இயற்றப் பெற்ற செய்யுளணிகளை அணிந்த, கம்மியரால் இழைக்கப்பெற்ற நகைகளை அணிந்த; நூல் இடை ஒளிர் — நூலைப்போலும் இடை விளங்குகின்ற, நூற்களின் இடையிலே விளங்குகின்ற.

முன்மாதச் செய்யுள்.

குடிலை — பிரணவம், அஃது "ஓம்" என்பதாம். கலகங் கடந்த, கலகம் + கடந்த — குழப்பம் நீங்கிய; கலகங்கள் + தந்த — குழப்பங்களை யுண்டுபண்ணிய.

வேதாகம புராண காவியங்கள் தமிழ்ப் பழந்தகுதிகளையே தத்தம் வித்தெனக்கொண்டு, மக்களின் மும்மலச் சிக்கலை மாய்த்தலின் அவற்றைக் கலகம்கடந்த என்றும், அவையே நுண்ணுணர்வில்லார் மதிமயக்கமிக்கு மனங்குழம்பித் தம்முள் கலாய்த்தற்கும் இடனாகி ஒன்றையொன்றெவ்வாதன போல் தோன்றுகின்றமையின் கலகங்கள்தந்த என்றும் இரட்டுற மொழிந்தாம்.

மறை — அவ்வேதாகமங்கள் அனைத்திற்குந் தாயகமாய், மக்களின் ஒழுக்கநெறியை இயக்குந் தாத்ததாய் இருந்து மறைந்த ஆதித்தமிழ் நூல். கட்டழகு — மிக்க அழகு; கட்டு + அழகு — அணியும் அழகு; நாலினாற் பெற்ற கலை — அம்முதல் நூலினின்றும் போந்த எனைய நூல்கள், பருத்தி நூலாடை; கலை — ஒளியுமாம்; நித்தியம் கிளைத்த வித்தே — நாள்தோறும் பெருக்கிய விதையே, முத்திக்குப் பிறப்பிடமாகிய அறிவே.

நிறை மதி முகத்து — முழுநிலவினைப்போன்ற முகத்தினையுடைய, நிறைந்த ஒவ்வொரு மாத முதலிலும்; மலர்த் தாள் — மலர்போன்ற திருவடி, மலர் என்னும் இப்புத்தக இதழ்; பரவு நெறி — வணங்கும் வழி, இது எங்கும் மிகுதியாகும் வகை; இயல் இசை — இயலும் இசையும், இயற்றமிழை எடுத்தியப்பும்.

அணங்கின் ஆக்கம்.

உலகம் உவகை ஒன்றையே நாடுகின்றது. அவ்வுவகை யுண்டாகும் வகைகள் பல. அவற்றுள், நமக்குற்ற இடையூற்றை முற்றும் இற்றொழியச் செய்து அதனால் எய்தும் உவகையே உவகைகள் எவற்றினும் உயர்ந்த உவகையாம். தற்போதுள்ள இவ்வுலகப் பெரும்போரால் மாநிலமெங்கெங்கும் மக்கள் பஞ்ச மிக்குப் பரிதபிக்கின்றனர்; உவகையை மறந்து வருந்துகின்றனர். உணவுக்குறைவால் உடலை உணக்குகின்றனர். உடைக்குந் தடை நேர்ந்து உள்ளம் உடைகின்றனர். விறகுப் பஞ்சத்தை விரட்டி யடிக்கும் விரகின்றி விழிக்கின்றனர். நிலவளஞ் சிறந்து, நீர்வளம் பெருகி, இயற்கைநலம் நிறைந்து, விளையுள்மலிந்த தன் நாட்டு மக்கள், இங்ஙனம் வாட்டமுற்று நலிவது கண்டு நம் அணங்கும் அணங்குகின்றனள்.

அறிவே அல்லலை அறுக்கும் அரிவாள்; அதுவே அகமகிழ் வின் அடிப்படை; அமைதி அமைந்த நல்வாழ்வே அறிவுடைமை யின் அறிகுறி. இதுபற்றியே, "பேறறிவினேன் இனிதுவாழாமை பொய்" என்பர் பெரியர். அவ்வறிவினை அடையுந் துறைகள் பல. அவற்றுள் கல்வியாற் பெறும் அறிவே கனம்பெறும். இதனா லன்றோ கல்வியைச் "சிற்றுயிர்க்குற்ற துணை" யெனச் செப்புவர் சீரியர். அக்கல்வியும் பல்கடலனைய பரப்பினதாம். மக்களின் உணர்ச்சியை ஊக்கி, உளத்தை உரம்பெறச் செய்வதில் தாய் மொழிக்கல்வியே தலையாயது. ஆதலால், தாய்மொழி தழைக்கத் தாயகஞ் செழிக்கும் என்னுங் கருத்தினைத் தலைக்கொண்டு, தக்க பணியாக்கும் நோக்குடன் நம் தமிழணங்கு வெளிப்போந்தனள். அவளைப் பெற்றுவக்கும் பெரும்பேற்றை யாம் பெற்றேம்!

இப்பச்சிளம் பாவை இதுகாறுந் தத்திப்பயின்ற தளர்நடை யினளாய், இக்காலக் கலக்கத்தில் எமக்குற்ற பொருள்முடை, உடல்நலக் குறை முதலிய இடையூறுகளால், படர்வளியிடையிற் படர்கொம்பின்றிப் படர்வுற்ற பைங்கொடி என நின்றனள். "உடுக்கை இழந்தவன் கைபோல வாங்கே, இடுக்கண் களைவதா நட்பு" என்னும் ஆன்றோர் ஆணைக்கிலக்காய் விளங்கும் நம் கெழு தகை நண்பர் திரு. வீ. கருணாகரன் B. Sc., அவர்கள், இம்மழ விளங் குழவியின் விழுமங்கண்டு அவட்கொரு கொழுகொம்பென

மன்னி, இனி இவளைப் போற்றிப்புரக்கும் செல்வச் செவிலியாக விழைந்தனர். இதுமுதல் இம்மதிமுகத்தாளை நடாத்தும் முழுப் பொறுப்பினை அவரே ஏற்பார். இங்ஙனம் நம் அணங்கின் ஆக்கம் பெருக்கும் அந்நண்பர்பால் இத்தமிழுலகம் என்றென்றும் நன்றி யறியுங் கடப்பாடுடையதாம்.

நம் நாட்டுக் கலையறிஞரின் கட்டுரைக் கட்டமுதூட்டியும், புலவர்தரும் புதுக்கலை புனைவித்தும், ஆன்றோர் அருளும் அரும் பணி பூட்டியும், பிறதிசைப் பேரறிஞரின் சொல்லும், பொருளும் பொன்னும், மணியுமெனப் பொருத்தியும் நம் கட்டழகியாங் கன்னித் தமிழணங்கினை நண்பர் திரு. கருணாகரன் அவர்கள், நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகப் போற்றி வளர்த்துக் 'காப்பதே விரதமெனக்' கடைப்பிடித் தொழுகுவாராக!

அயல்மொழித் தழும்பும், அயல் ஒழுக்கவழுக்கும் படிந்து, குத்திரங், கோள் முதலிய குறுமறுக்கள் கிளம்பி, நம் அணங்கின் பொன்மேனியைப் புன்மேனியாக்கா திருப்பனவாக! அரசியற் புரட்சியும், சமயச்சச்சரவும் விளைவிக்கும் துச்சமொழிகளையும், பிறரைத் தாக்கிப்பழிக்கும் கட்சிவேற்றுமை காட்டும் வெற்றுரை களையும், அகடுதந்து அறிவை அழிக்கும் விகடங்களையும் நம் அணங்கு ஒருபோதும் பயிலாதிருப்பாளாக! மக்களின் மேட்டி மையை வீட்டும் போட்டியாட்டங்களிலும், அவர்களை மடக் காட்சியராக்கும் படக்காட்சிகளிலும் இம்மியும் நாட்டங்கொள் ளாது நம் நற்றமிழ் நங்கை நடப்பாளாக!

நூற் கேள்வியின் நுண்ணுணர்வூட்டும் சொல்லூடாட்டங் காட்டி, முத்தமிழ் வித்தகம் செழித்து, நம்மனோர் தமிழ் தழீஇய ஒழுக்கம் மிக்கோராய், வறுமை, அடிமை முதலிய புன்மைகளினின்றும் விலகி, செம்மை, தலைமை முதலிய மேன்மை களிற் சிறந்து, அறிவு, ஆண்மை, ஊக்கம், உரம், ஒற்றுமை, வாய்மை முதலியவற்றில் தூய்மைபெற்று இனிதுவாழும் வழி கோலி, நம் கன்னித் தமிழணங்கு கருணாகரன் கருணையால் கருணாகர்ன் கருத்தில் என்றும் கவினுடன் வாழ்வாளாக!

ஆசிரியன்

ஸ்ரீ

திருவாய்மொழி விளக்கம்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்
தமிழ் பயிற்றுமுறை விரிவுரையாளர்
வித்வான் திரு. A. பூவராகம் பிள்ளை அவர்கள்,
13—6—'42-ல் திருச்சி வானொலியில் வழங்கிய சொற்பொழிவு.

—: o :—

நினைந்து நைந்துள் கரைந்துருகி இமையோர் பலரும் முனிவரும்
புனைந்த கண்ணி நீர் சாந்தம் புகையோடேந்தி வணங்கினால்
நினைந்த எல்லாப் பொருள்கட்கும் வித்தாய் முதலிற் சிதையாமே
மனஞ்செய் ஞானத்துன் பெருமை மாசூணாதோ மாயோனே.

இது, திருவாய்மொழியில் ஐந்தாம் பதிகத்து இரண்டாம் பாசுரம். இப்பதிகத்தில் ஆழ்வார், முழுமுதலாகிய திருமாலின் உயர்வையும் தம் தாழ்வையும் வெளியிடுகின்றார். இப்பதிகத்தின் பாயிரத்தில், ஆழ்வார் இறைவன் உயர்வையும் தம் தாழ்வையும் நினைந்து, தாம் அவ்விறைவனை அடைவதால் அப்பெருமான் உயர்வுக்குக் குறைவுநேரும் என்றெண்ணி, அவனைவிட்டு அகல நினைப்பதாகவும், அஃதறிந்த எம்பெருமான் நீர் நம்மையடைவது நமக்குப் பெருமையும் மகிழ்வுமாகும் என்று கூறி ஆழ்வாரைத் தழுவிக் கொள்வதாகவும் மேற்கூறிய கருத்தை விரிவாக விளக்கியுள்ளார் வியாக்கியான ஆசிரியர்.

ஒருவரை ஒருவர் அடைவதால் அவ் அடையப்படுபவர் பெருமை குறையுமோ எனின், குறையும். அரசருள் மிக்க பேரரசன் ஒருவன் தன் அருஞ்செயலைப் புலவருட் சிறந்த பெரும் புலவர் பாவிலமைத்துப் பாடுவதைப் பெருமையாகவும், பிறர் பாடுவதைக் குறைவாகவும் நினைத்தல் இயல்பு. இத்தகைய நிகழ்ச்சி ஒன்று புறநானூற்றில் காணப்படுகின்றது. மாந்தரஞ் சேரல் இரும்பொறை என்னும் சேரவேந்தன் அரியதொரு வெற்றிச் சிறப்படைந்தபோது அதனைப் பாடுதற்குக் கபிலர் இல்லையே என்று வருந்தினன். இதனைப் புறம் 53-ல்,

... ... "தாழாது
செறுத்த செய்யுட் செய் செந்நாவின்

வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க்கபிலன்
இன்றுளனாயின் நன்றுமன் ”

என்ற பகுதியிற் காண்க. சேரவேந்தன், கபிலர் பாடுவதே தன் பெருமைக்குச் சிறப்பாகும்; பிறர் பாடுவது சிறப்பாகாது குறைவே யாகும் என்னும் கருத்தினன் ஆதலே “விளங்கு புகழ்க்கபிலன் இன்றுளனாயின் நன்று” என்றதனால் உய்த்துணரலாம். இத்தகைய மனநிலை மாறியமைதலும் உண்டு.

அடைபவர் தங்கள் செயலால் அடையப்படுபவர் பெருமைக்குக் குறைவுவரும் என்றெண்ணும் மனஇயல்பு, அவ்வடையப்படுபவர்பால் பேரன்புடையவர் தன்மையாய், அரிதாக ஓரோவழி காணப்படுவதாகும். இராவணனாற் கவர்ந்து செல்லப்பட்ட சீதாபிராட்டியாரை அநுமான் கண்டு அப்போதே தூக்கிச்சென்று இராமபிரானிடம் சேர்ப்பதாகத் தெரிவித்தான். அதற்குப் பிராட்டியார், அங்ஙனம் செய்தல் தவறு;

“அல்லல் மாக்கள் இலங்கைய தாகுமோ
எல்லைநீத்த உலகங்கள் யாவும் என்
சொல்லினாற் சுடுவேன் அது தூயவன்
வில்லி னாற்றற்கு மாசென்று வீசினேன்”

என்றார். இவ்விலங்கை மட்டுமன்று, எல்லா உலகங்களும் ஒருங்கு கூடித் தடுப்பினும், என் ஒரு சொல்லால் அவற்றை அழித்து, என் நாயகனை அடைவேன்; அது அப்பெருமான் வில்வீரத்துக்குக் குறைவாகும் என்றே அங்ஙனம் செய்யாது இத்துன்பம் அனுபவித்திருக்கிறேன் என்றார் இதனால் தான் முயன்று இராமபிரானை அடைவது அவர் பெருமைக்குக் குறைவாகும் என்று கருதி, அவர் வந்து மீட்குமளவும் காத்திருத்தலே நன்றெனப் பிராட்டியார் எண்ணியமை காண்க இதுபோன்றதொரு மனநிலையினாலேயே ஆழ்வார், நித்தியசூரிகட்குத் தலைவனாக விளங்கும் அந்தமில் ஆதியம்பகவனாகிய அப்பெருமானைத் தாம் அடைந்தால் அப்பெருமானுக்குக் குறைவாகும் என்றெண்ணி அகல நினைத்தனர் எனக் கொள்க.

இனி, இதன் முதற்பதிகத்தில் நாயகியின் மனநிலையுடையராகப் பேசிய ஆழ்வார் இப்பதிகத்தில் தாமான தன்மையிற் பேசுகிறார். இவர் இறைவன் பேரருளால் உயர்ந்த ஞானமும்

சிறந்த பக்தியும் அருளப்பெற்றவராகையால், ஞானம் மேம்பட்டு நிற்கும்பொழுது தாமான தன்மையும், அன்பு மேம்பட்டு நிற்கும் பொழுது தலைவி மனநிலையும் உடையராகப் பேசுகின்றார் எனக் கொள்க. ஞானத்தில் தம்பேச்சு பிரேமத்தில் பெண்பேச்சு என்பர். இப்பதிகப் பாயிரத்திலும் "கீழ்க்கலங்கித் தூதுவிட்ட விடம் பிரேமகாரியம், இங்கு அகலப் பார்க்கிற இடம் ஞான காரியம்" எனக் கூறப்பட்டுள்ளது. இவ்விரண்டாம் பாசுரத்தில் தாம் அடைவது அப்பெருமானுக்குக் குறைவாகும் என்பதுமட்டு மன்று; தேவர்களும் முனிவர்களும் அப்பெருமானுக்குச் செய்யும் ஆராதனங்களும் அவன் பெருமைக்கு ஏலா என்கிறார்.

இமையோர் பலரும் முனிவரும் - பிரம்மா முதலான தேவர்களும், சனகர் முதலான முனிவர்களும்; நினைந்து நைந்து உள் கரைந்து உருகி - இறைவனுக்கு ஆராதனம் செய்யப்போகின்றோம் என்று அன்போடு நினைந்து, மனங்கசிந்து, அவ்வன்பின் மிகுதியினால் மனம் நீரிற்பட்ட பசுமட்கலம்போல் கரைந்து, தீயணைந்த மெழுகுபோல் உருகி; புனைந்த கண்ணி நீர் சாந்தம் புகையோடேந்தி வணங்கினால் - அழகாகத் தொடுத்த பூமாலை, திருவடி விளக்கல் முதலியவற்றிற்குச் சேர்த்த நீர், சந்தனம், நறும்புகை முதலியவற்றை ஏந்திக்கொண்டு வணங்கினால்; நினைந்த எல்லாப் பொருள்கட்கும் வித்தாய் - நின்னால் நினைக்கப்பட்ட எல்லாப் பொருள்கட்கும் மூன்றுவித காரணங்களுமாகி; முதலிற் சிதையாமே - தானான தன்மையில் சிறிதும் சிதையாதவாறு; மனஞ்செய் ஞானத்துன் பெருமை - எல்லாப் பொருள்களும் உண்டாகுமாறு செய்கின்ற சங்கற்ப ஞானத்தையுடைய உன் பெருமைக்கு; மாசூணாதோ - குறைவு வாராதோ? குறைவு வரும் என்றபடி.

இதில் முதல் இரண்டடிகளில் இறைவனை ஆராதிக்கும் தேவர் முனிவர்களின் நிலையை விளக்குகின்றார். ஒருவன் விருப்பத்தோடு செய்யும் காரியங்களை, அவற்றைச் செய்ய நினைக்கும் நேரம்முதல் முடிக்கும்வரையில், இடையில் உண்டாகும் வருத்தங்களையும் வருத்தங்களாக எண்ணாது, உள்ளத்தே மிக்க மகிழ்ச்சியோடு செய்துமுடித்தலை உலகியலில் நன்கு காண்கின்றோம். அக்காரியங்களில், அவரவர் விருப்ப மிகுதிக்கும் குறைவுக்கும் ஏற்றவாறு, மகிழ்ச்சியும் மிக்கும் குறைந்தும் இருத்தல் இயல்பு.

"உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்
கள்ளுக்கில் காமத்திற் குண்டு"

என்ற திருக்குறளில் கட்குடிப்பானுக்கு அக்கள்ளை நினைக்க அளவிலும், கண்ட அளவிலும், உண்டதுபோன்ற மகிழ்ச்சி உண்டாதலில்லை. ஆனால் மனம் ஒத்த காதலர் திறத்திலோ எனின், அங்ஙனம் இல்லை. கூடியளவளாவுதலே யன்றி, காதலனுக்குத் தன் காதலியை நினைக்கும் நினைப்பும், காணும் காட்சியும் உள்ளத்தே இன்பத்தை மிகுவிப்பனவாகும் என்பது இதன் கருத்து. இவ்வுலகியல் இன்பமே இந்நிலையதாயின், அந்தமில் பேரின்பத்து அழிவில் வீடு அளித்தற்குரிய எம்பெருமானுக்கு ஆராதனம் செய்ய நினைப்பது முதலே, உள்ளத்தில் இன்பம் ஊற்றெடுத்துப் பெருகும் என்பது சொல்லவும் வேண்டுமோ? பிரமன் முதலான தேவர்களும் சனகாதி முனிவர்களும் எம்பெருமானுக்கு ஆராதனம் செய்ய எண்ணியது முதலே மகிழ்ச்சிமிக்கு, உள்ளம் அன்பினுல் கரைந்துருகிக்கொண்டே மாலை முதலியவற்றைச் சித்கம் செய்து அவற்றை அவன்முன் ஏந்திநின்று வணங்குவர் என்பார், "நினைந்து, நைந்து, உள்கரைந்து உருகிப்புனைந்த கண்ணிநீர் சாந்தம் புகையோடு ஏந்தி வணங்கினுல்" என்ருர்.

இறைவன் எல்லாம் நிறைந்தவன்; இவர்கள் கொண்டு போகும் பொருள்களைப் பெற்றே மகிழவேண்டுபவ னல்லன். அவனிடத்து இவர்கட்குள்ள அன்பும், ஆராதனத்தில் உள்ள அவ்வன்போடு கூடிய முயற்சியுமே அவன் மகிழ்ச்சிக்கு உரியன என்பார், அவனுக்கு மாலையை அணிந்தனர்; சாந்தைப் பூசினர்; என்றிங்ஙனம் கூருது, "ஏந்தி வணங்கினுல்" என்ருர். இவர்கள் இங்ஙனம் அன்போடு முயன்று செய்யினும் இவர்கள் செயல் அவன் பெருமைக்குத் தரம்போதாதாதலின், அவன் பெருமைக்குக் குறைவேயாகும் என்பார், "உன் பெருமை மாசூணுதோ" என்ருர். அத்தகைய பெருமை யாதெனின், அவன் பெருமைகள் பலவற்றுள் ஒன்றை விளக்குகின்ருர் பிற்பகுதியில். காரிய வடிவமாக உள்ள எல்லாப் பொருள்களும் முடிவுக் காலத்தில் காரிய வடிவை இழந்து காரண நிலையில் ஒடுங்கிக் கிடக்கும். அப்பொழுது இவை எல்லாம் இங்ஙனம் கிடக்கின்றனவே என இறைவன் நினைத்தல் உண்டு. அங்ஙனம் நினைத்த பின்னரே இவற்றைப் படைத்தல் வேண்டும் என்னும் சங்கற்பமுடையனுய்ப் படைக்கின்ருன். ஆதலின் அந்நினைவையே 'நினைந்த' என்றும்,

சங்கற்ப ஞானத்தையே 'மனஞ்செய் ஞானம்' என்றும் வெளியிட்டார்.

உலகத்தில் எப்பொருளையும் செய்து முடித்தற்கு முதற் காரணம், துணைக்காரணம், நிமித்தகாரணம் என மூன்று காரணங்கள் வேண்டுவதுபோல உலகைப் படைப்பதற்கும் மூன்று காரணங்களும் வேண்டும். உலகைப் படைப்பதற்கு இறைவனே மூன்று காரணங்களும் ஆகின்றான் என்பது வைணவ சமயக் கொள்கை. அக்கொள்கையை விளக்க "எல்லாப் பொருள்கட்கும் வித்தாய்" என்றார். இறைவன் முதற் காரணம் என்று சொல்வதில் ஒரு குறை தோன்றும். முதற்காரணம் என்பது கார்யமாக மாறுவது. குடத்திற்கு மண் முதற்காரணம். மண் குடமாக மாறினால் பின் மண் அங்கு இராது. அதுபோல இறைவன் முதற்காரணமாகி உலகப்பொருளாக மாறினால் பின் இறைவன் என வேறு ஒரு பொருள் இருத்தல் இயலாதன்றே. இக் குறைபாட்டை விலக்கவே 'வித்தாய் முதலிற் சிதையாமே' என்றார். உலகத்துப் பொருள்கள் போலன்றி, இறைவன் தன் நிலையில் சிறிதும் சிதைவின்றி இருந்துகொண்டே எல்லாப் பொருள்கட்கும் முதற்காரண மாகின்றான் என்பது கருத்து. அஃது அவனுடைய ஆச்சரிய சக்தியாகும்.

"சின்னூல் பலபல வாயாலிழைத்துச் சிலம்பி பின்னும்
அந்நூல் அருந்தி விடுவதுபோல அரங்கர் அண்டம்
பன்னூறு கோடி படைத்த யாவும் பழம்படியே
மன்னூழி தன்னில் விழுங்குவர் போதமன மகிழ்ந்தே"

என்ற திவ்யகவி பிள்ளைப் பெருமாளையங்கார் பாடல் ஈண்டு நினைத்தற்குரியது. சிறிய சிலந்திப்பூச்சி தன்னிடத்திருந்து நூலை உண்டாக்கிப் பின் அதனை விழுங்குகின்றது. நூல் உண்டாவதற்கு முதற்காரணமாக உள்ள அப்பூச்சி தன்னிலையில் அழிவதில்லை. ஒரு சிறிய பூச்சிக்கு இச்செயல் கூடுமானால், தன் நிலையில் சிதைவின்றித் தான் உலகிற்கு முதற்காரணமாதல், எல்லாம் வல்ல இறைவனுக்கு அரிதாகுமோ? "ஒரு சிலந்திக்கு உண்டான ஸ்வபாவம் சர்வ சக்திக்குக் கூடா தொழியாதிறே" என்ற தத்துவத்திரய வாக்கியமும் நோக்கத் தக்கதாகும். இத்தகைய ஆச்சரியமான அவன் நிலைகளைக் கருதியே 'மாயோனே' என்றார். இதனால் எம்பெருமான் பெருமையும், ஏனையோர் நிலையும், பிரம்மா முதலானோர் ஆராதனம் செய்யும் தன்மையும் விளக்கப்பட்டன.

புலவரும் புரவலனும்.

திரு. G. சௌந்தரபாண்டியன் அவர்கள்,
தமிழாசிரியர், முகம்மதியர் உயர்கலைக் கழகம், ஆம்பூர்.

—:o:—

குன்றும், மலையும், காடும், கரையும் பல கடந்து முதிரத்து முதல்வனை யணுகித் தம் வறுமை வாழ்க்கையை விளக்கும் செந்நாப் புலவர் சித்திரனார் செய்யுள் சுவைததும்பும் ஓர் அழகிய நாடகக் காட்சியாய் அமைந்துள்ள நயம் அறிந்து போற்றத் தகும்.

வறிஞர்கட்கும் அறிஞர்கட்கும் வளம் பல ஈந்து, உவந்த இன்முகமோடு முதிர்த்து முதல்வன் அரியணைமீது அமர்ந்திருக்கின்றான். அறிஞர் அறவுரை அறைகின்றனர். வறிஞர் வாழ்த்தொலி வழங்குகின்றனர். புலவர் புகழுமொலி எங்கும் பொங்குகிறது. மன்னன் மகிழ்கின்றான். ஈத்துவக்குமிவன் இசை எங்கும் பரவுகின்றது. இசையால் திசைபோய எங்கல்முன் வறியராய், எளியராய் வருகின்றார் சித்திரனார் என்ற செந்நாப்புலவர். அரசன் எழுந்து எதிர்சென்று எற்கின்றான். அன்புகனிந்த மொழிகளால் ஆதரிக்கின்றான். அரியணை யமர்த்துகின்றான். இன்சொல்லால் புலவரும் இன்புறுகின்றார். நெய்யடிசில் பொற்கலத்திட்டுப் புலவர்க்கு உடனிருந்து ஊட்டுகின்றான். உண்டு உவந்து புலவர்பெருமான் தம் சுற்றத்தாரை நினைக்கின்றார் நெஞ்சு நெக்குருகுகின்றார். தம் வறுமை வாழ்வை அரசன்முன் நடித்துக் காட்டுகின்றார். அது ஓவிய நாடகமன்று; காவிய நாடகம். அந்நாள் ஓவிய நாடகமில்லை யன்றோ!

"என் வீடு உண்ணும் பண்டம் மறந்திருக்கின்றது. அங்கு என் தாய் ஒருத்தி; ஆண்டு பல கழிந்தவள்; கண்ணொளி காந்தவள்; அவளுக்குக் கோலே கால்; அவள் வெள்ளிய நூல் விரித்தாற்போன்ற மயிரினள்; வெளியில் வரமுடியாது வெம்புகின்றாள்; 'ஆண்டுகள் பல கழிந்தும் என் உயிர் செல்லவில்லையே' என்று ஏங்குகின்றாள்" என்று முதற்காட்சியை முடிக்கின்றார்.

"என்னை நேசித்த மனைவி ஒருத்தி; வெளிறின மேனியள்; உலர்ந்த மார்பினள்; பல்குறு மக்களின் தாய்; அவள் பசியால் வருந்துபவள். குப்பையில் தானே முளைத்த கீரையின் இளந் தளிர் கிள்ளி வருவாள். அதனை உப்பின்றி அவிப்பாள். தண்ணீரை உலையேற்றி வெந்நீராக இறக்குவளன்றி வேறில்லை. சோறுமில்லை; மோருமில்லை; என்செய்வாள். உப்பில்லாக் கீரையை உண்டு உளம் சாம்புவாள். ஊழ்வினையை உன்னி உருகுவாள்" என்று தம் மனைவியின் இன்னலை இரண்டாவது காட்சியாகக் காப்புச் சார்த்துகின்றார்.

இனி, மூன்றாங் காட்சியாக அவர் தம் மனைவியொடு மக்கள் படும் மனவருத்தம் மாண்புற விளக்கப்படுகின்றது. தாய் ஒக்கலில் ஒரு புதல்வன்; புல்லிய குடுமியை உடையவன்; இல்லி தூர்ந்த பொல்லா வறுமுலை சுவைக்கின்றான்; ஒரு துளிப் பாலும் ஊறவில்லை. கூழுண்டாயினும் கும்பிக்கொதிப்படக்க நினைக்கின்றான். பானை திறந்து பார்க்கின்றான். ஒன்றுமில்லாதது கண்டு கண்கலங்குகின்றான். தாய், 'ஐயோ! புலி வருகிறதே! அழாதே' என்று அச்சுறுத்துகின்றாள். 'அதோ! அம்புலி பார்! என்ன அழகாய் இருக்கின்றது!' என்று அழுகையை மாற்ற முயல்கின்றாள். அழுகை மாறவில்லை. 'உன் தந்தையை நினைந்து வெறுத்த நின் அழுகைக் காட்டு' என்று வெறுத்தும், இடித்தும் வினவுகின்றாள். நல்குரவால் நைகின்றாள் என்று கூறி முடித்துப் பின் குமணனது குறுமலை வளம் கூறிப் பரிசில் பெற்றுப் பிரிகின்றார்.

இவ்வாறு மதிநலம் வாய்ந்த புலவர்பெருமான் மன்னவனையணுகி அவன் தன் வறுமைவாழ்வைக் கண்ணெதிரே காணுமாறு ஓர் விழுமிய நாடகமாக நடித்துக் காட்டிய காவிய நாடகம் இன்று நாம் காணுமாறு புறநானூற்று அரங்கில் பொலிவது நினைந்து நினைந்து மகிழத்தக்கதாகும்.

சோழநாட்டின் எல்லை.

வெண்பா.

கடல்கிழக்குத் தெற்குக் கரைபொருவெள் ளாறு;
குடதிசையிற் கோட்டைக் கரையாம்;—வடதிசையில்
ஏணாட்டுப் பெண்ணை இருபத்து நாற்காதம்
சோணாட்டுக் கெல்லை யெனச் சொல். —கம்பர்.

பழந்தமிழ்மக்கள் போர்முறை.

வித்துவான்
திரு. S. முத்துக்கிருட்டின நாட்டார் அவர்கள்,
தமிழாசிரியர், திருவாரூர்.

12-ம் பக்கத் தொடர்ச்சி.

போர்புரியுங் காலத்து மடிந்த உள்ளத்தோனையும், மகப் பெறுதோனையும், அடிபிறக்கிட்டோனையும், பெண் பெயரோனையும், படையிழந்தோனையும், ஒத்த படையெடாதோனையும் கொல்லாது விடுதலை மரபாகக் கொண்டிருந்தனர். கண்ணிமைத்தோன் மேலும் வாளோச்சலை மறுக்கின்றது வள்ளுவர் மறை.

இவ்வாறு இகல்செய்த இருபெரு வேந்தருள் ஒருவன் மற்றொருவனைக் கொன்று அவன் முடிக்கலம் முதலியனகொண்டு இறந்த வேந்தன் பெயரான், தான் முடிபுனைந்து மங்கலநீராடுவதன்றி, தன் வெற்றிக்கேதுவாகிய வாளினைக் கொற்றவைமேல் வைத்து நீராட்டிப் பின்னர் பரந்துபட்ட படைக்கடற்கெல்லாம் பெருஞ்சிறப்புச் செய்வான்.

பகைவர் மதிலினை முழுவதும் இடித்துக் கழுதை கட்டிய ஏரால் உழுது வெள்ளைவரகும் கொள்ளும் விதைப்பதும் உண்டு.

"வெள்வாய்க் கழுதைப் புல்லினம் பூட்டிப்
பாழ்செய் தனையவர் நனந்தலை நல்லெயில்" —புறம்

"வடதிசை மன்னர் மன்னெயின் முருக்கிக்
கவடி வித்திய கழுதையே ருழவன்" —சிலப்பதிகாரம்

"எழுதெழின் மாடத் திடனெலா நூறிக்
கழுதையேர் கையொளிர்வேல் கோலா—வுழுததற்பின்
வெள்வரகு கொள்வித் திடினும் விளியாதாற்
கள்விரவு தாரான் கதம்"
—வெண்பாமாலை

என்பவற்றானு மறிக. இங்ஙனஞ் செய்யு மதிற்போரினைத் தொல்காப்பியர் 'உழிஞை' என்பர். உழிஞையாவது-கொற்றான் என்பர் புறநானூற்றுரைகாரர்.

இனி, மதிற்போர் புரிதலேயன்றிக் காடும் மலையுமல்லாத களரும் பணனுமான பரந்த வெளியிடத்தில் இடங்குறித்து

ஆங்கே இருபெரு வேந்தரும் தானை, யானை, குதிரை, தேர் முதலிய நால்வகைப் படைகளையும் அணி அணியாக வகுத்துப் போர் புரிதலுமுண்டு. அவற்றுள் தானை நிலையைப் பற்றி,

"குழாக்களிற் றரசர் குறித்தெழு கொலைக்களம்
விழாக்களம் போல மெய்ம்மலி யுவகைய
ராண்மை யுள்ளங் கேண்மையிற் றூரத்தலி
னழுந்துபடப் புல்லி விழுந்துகளம் படுநரு
நீர்ப்பெயற் பிறந்த மொக்குள் போலத்
தாக்கிய விசையிற் சிதர்ந்துநிலம் படுநருந்
தகருந் தகருந் தாக்கிய தாக்கின்
முகமுகஞ் சிதர முட்டு வோரு
முட்டியின் முறைமுறை குத்து வோருங்
கட்டிய கையொடு காறட் குநருங்
கிட்டினர் கையற் றெட்டிற் போருஞ்
சுட்டிய பெயரை விட்டழிப் போருஞ்
சக்கரம் போலச் சங்குவிட் டெறிநருஞ்
சிலைப்புடை முரசிற் றலைப்புடைக் குநரு
மல்லிற் பிடித்தும் வில்லி னெற்றியு
மூக்கியு மூாப்பியு நோக்கியு நுவன்றும்
போக்கியும் புழுங்கியும் நாக்கடை கவ்வியு
மெயிறுடன் றிருகியுங் கயிறுபல வீசியு
மினைய செய்தியின் முனைமயங் குநரும்
பிறப்பும் பெருமையுஞ் சிறப்புஞ் செய்கையு
மரசறி பெருமையு முரைசெல் லாண்மையு
முடையோ ராகிய படைகொண் மாக்கள்
சென்றுபுகு முலக மொன்றே யாதலி
னொன்றுபடு மனத்தொடு கொன்றுகொன் றுவப்பச்
செஞ்சோற்று விலையுந் தீர்ந்துதம் மனைவியர்
தம்பிணந் தழீஇ நொந்துகலுழ்ந் திரங்கவும்
புதுவது வந்த மகளிர்க்கு
வதுவை சூட்டிய வான்படர்ந் தோரே"

என்னும் புறத்திரட்டு புகலுகிறது.

வேந்தனும், தன் படையாளர் போர் செய்கின்றமையைக் கண்டு தானும் படையாளர்க்கு முன்னே சென்று போர்புரிவான். அவனைப் பகைஞர் சூழ்ந்துகொள்வாராயின், மற்றோரிடத்துப்

போர்புரியும் சேனைத்தலைவன். அதனைக் கண்டு தான் புரியும் போரினைக் கைவிட்டுக் காற்றினும் கடுகி ஓடிவந்து தம் வேந்தனைச் சூழ்ந்தாரோடு பொருதலும், பொருது வீழ்தலும், தோற்று ஓடும் தனது படையினிடத்து முன்சென்று பொருதலும், கைப் படை போக்கியவிடத்து மெய்யாற் பொருதலுமாகிய அரிய வீரச் செயல்களை யுடையவனாக விளங்கியிருந்தனன்.

போர்புரிந்து இறந்த வேந்தனைக் கொன்ற வேந்தன் படையாளர் சூழ்ந்து நின்று ஆடிப்பாடி மரியாதை செய்தல் பழைய வழக்கமாக விருந்தது.

"விழவு வீற்றிருந்த வியலு ளாங்கட்
கோடியர் முழவின் முன்ன ராடல்
வல்லா னல்லன் வாழ்கவவன் கண்ணி
வலம்படு முரசந் துவைப்ப வாளுயர்த்
திலங்கும் பூணன் பொலங்கொடி யுழிஞையன்
மடம்பெரு மையி னுடன்றுமேல் வந்த
வேந்து மெய்ம் மறந்த வாழ்ச்சி
வீந்துகு போர்க்களத் தாடுங் கோவே"

என்னும் பதிற்றுப்பத்தானும் இச்செய்தியை அறியலாம்.

பொருகளத்துத் தன் வேந்தன் வஞ்சத்தால் வீழ்ந்துபட, அது கண்டு சினங்கொண்ட மனத்தனாகிய பெரும்படைத் தலைவன் தலைமயங்கிப் போர்புரிந்து நற்புகழைப் பெறுவான். இதற்கு நச்சினார்க்கினியர், "குருகுல வேந்தனைக் குறங்கறுத்த ஞான்று இரவு ஊரெறிந்து பாஞ்சாலரையும், பஞ்சவர்மக்களையும் கொன்று வென்றிகொண்ட அச்சுவத்தாமாவின் போர்த்தொழிலை" உதாரணமாகக் காட்டுவார். இவ்வாறு பரந்த வெளியிடத்திற் போர் புரிதலை ஆசிரியர் தொலகாப்பியர் 'தும்பை' என்பர். பொற்றும்பை, பொலந்தோட்டுப் பைந்தும்பை, பொலந்தும்பை (புறம்), பொலம்பூந்தும்பை (மதுரைக்காஞ்சி) என்று காணப்படும் மேற்கோள்களிலிருந்து இதனைப் பொன்னாற்செய்து அணிந்துகொள்ளுவதும் உண்டு என்று தெரிகின்றது.

வெற்றிபெற்ற அரசன், வேளாண்மாக்கள் விளையுட்காலத்து நெற்கதிரைக் கொன்று களத்திற் குவித்துப் போர் அழித்து, அகரிதிரித்துச் சுற்றத்தொடு நுகர்வதற்கு முன்னே கடவுட் பலி கொடுத்துப் பின்னர் பரிசிலாளர் முகந்துகொள்ள வரிசையின் அளிக்குமாறு போல, பகைஞரது நாற்படையையும் கொன்று

களத்திற் குவித்து எருது களிறாக வாள்பட் ஓச்சி அதரிதிரித்துப் பிணக்குவையை நிணச்சேற்றொடு உதிரப் பேருலைக்கண் ஏற்றி ஈனா வேண்மான் இடந்துழந்தட்ட கூழ்ப்பலியைப் பலியாகக் கொடுத்து எஞ்சிநின்ற யானை, குதிரைகளையும் ஆண்டுப் பெற்றன பலவற்றையும் பரிசிலர் முகந்துகொள்ளக் கொடுத்தலையும், வெற்றிக் களிப்பால் தேர்த்தட்டில் நின்று, தன் தானைத் தலைவரோடு கைபிணைந்து குரவையாடுதலையும் வழக்கமாகக் கொண்டிருந்தான். வெற்றிபெற்ற அரசன் வாகைமாலை சூடுவான். இது வெண்மை நிறமுடையது.

இப்படித்தாகிய போர்வகைகளுள், பகைவர் நாட்டுப் பார்ப்பார் முதலியோரை ஆண்டுநின்றும் அகற்றிப் பொருதல் தலையாயவறம்; அதுவன்றிப் பொருள் கருதாது பாதுகாவாதான் நிரையைத் தான்கொண்டு பாதுகாத்தல் அதனினிழிந்த இடையாய அறம்; அதுவன்றிப் பிறர்க்கு அளித்தற்கு நிரைகோடல் நிகழினும் அது அதனினுமிழிந்த கடையாய அறமெனப்படும். இனிப் பகைவன் போற்றாத நாட்டைக் கைக்கொண்டு தான் போற்றச் சேறலும், பொருள் வருவாய்பற்றிச் சேறலும், வஞ்சித்துச் சேறலும் போல்வன ஒன்றனின் ஒன்றிழிந்த ஞாலத்து நடக்கைக் குறிப்பு; மாற்றரசன் முற்றியவழி, ஆற்றாதோன் அடைத்திருத்தலும் அரசியலாயினும் அவன் வென்றியுள்ளமொடு வீற்றிருத்தலும், தனக்கு உதவி வரவேண்டியிருத்தலும், ஆற்றலன்றி ஆக்கங் கருதாது காத்தேயிருத்தலும் ஒன்றனினொன்றிழிந்த நடக்கைக் குறிப்பு

போர்புரிவதில் திறம்பெற்ற வீரன் இறப்பின், அவனது நினைவிற் கறிகுறியாகக் கன்னட்டு, அதில் அவனது பெயரும் அவன் புரிந்த வீரச்செயல்களையும் வரைந்து, காப்புநூல் யாத்துக் கடிகமழ் நீராட்டிப் பூப்பலி செய்து பூம்புகையிட்டு அவனைத் தெய்வமாக்கிக் கோயிலும், மதிலும், வாயிலுமெடுத்துப் பெருஞ்சிறப்புச் செய்து யாவரும் வணங்குவர்.

இனி, ஆடவரேயன்றிப் பண்டைக்காலத்தில் தமிழ்ப்பெண்டிரும் வீரஞ்சிறந்திருந்தனர். ‘வீரத்தாயர்’ என்னும் முன்னிதழ்க் கட்டுரை ஒன்றில் அச்செய்திகள் குறிப்பிட்டிருப்பது காண்க! பெண்ணசையால் நிகழும் போரை, மகட்பாற் காஞ்சி, மகண் மறுத்தல் என்ப. மூவேந்தரும் பாரியொடு பொருத போர், அவன் மகளிரை விரும்பி நிகழ்த்திய மகட்பாற் காஞ்சியாம்.

குறிஞ்சிப் பாட்டு.

திரு. I. D. தங்கசாமி அவர்கள் B.A.,

Senior Accountant, (Retd.), Accountant General's Office, Madras.

முற்காலத் தமிழ்மக்களுள் வழங்கிய மணம் எண்வகைத்து. அவற்றுள், கொடுப்பாரும் கேட்பாருமின்றி, இருவரும் தனியிடத் தெதிர்ப்பட்டுத் தாமே கூடுவது காந்தருவ மணமாகும். இத்தன்மைய மணத்தினைக் கபிலர், ஆரியவரசன் பிரகதத்தனைத் தமிழறிவித்தற் பொருட்டுப் பாடிய குறிஞ்சிப் பாட்டில் சிறப்பித்துள்ளார்.

குறிஞ்சிமணம் எண்மணத்தினுள் ளொன்றென்பதனைப் பின்வரும் வெண்பாவானறிக.

"ஆற்றல்சால் கேள்வி யறம்பொரு ளின்பத்தைப்
போற்றிப் புனைந்த பொருளிற்றே—தேற்ற
மறையோர் மண்மெட்டி னைந்தா மணத்திற்
குறையாக் குறிஞ்சிக் குணம்."

தலைவிக்குக் காமத்தாலுண்டான நோயை யறியாது வருந்துகின்ற செவிலிக்குத் தோழி யுண்மையறிவித்து வரைவு கடாயது, குறிஞ்சிப்பாட்டின் பொருள். மலைவளங்களையும், இல்லறமுறைமையையும், தலைவனுந் தலைவியும் தம்முள் வைக்கத்தகும் அன்புடைமையையும், கற்பின் இன்றியமையாமையையும் சொற்சுவை பொருட்சுவையுடன் கூறுமிப் பாட்டு, சங்கமருவிய நூற்றொகுதிகளுளொன்றாகிய பத்துப் பாட்டென்னுந் தொகுதியின் எட்டாவது பாட்டாகும். பின்வருவனவற்றைப் போன்ற சிலவடிகள் மனப்பாடம் பண்ணத்தக்கன.

"முத்தினு மணியினும் பொன்னினு மத்துணை
நேர்வருங் குரைய கலங்கெடிற் புணரும்
சால்பும் வியப்பு மியல்புங் குன்றின்
மாசறக் கழீஇ வயங்குபுகழ் நிறுத்தல்
ஆசறு காட்சி யையர்க்கு மந்நிலை
எளிய வென்னார் தொன்மருங் கறிஞர்."

[முத்து முதலியவற்றால் அமைந்த பூண் கெட்டால் பின்னும் வந்து கூடும்; அவ்வாறன்றி, குலத்திற்கேற்ற சால்பும், மேன்மையும், ஒழுக்கமும் குன்றினால் முனிவர்க்கேயெனினும் அக்குறையை முன்புபோல நிறைவுறுத்தல் அரிய காரியம்.]

இப்பாட்டு, பொருளிலக்கணத்தே யகவிலக்கணத்தின்பாற் படும். அகமாவது: ஒத்த அன்பினராகிய தலைவனும் தலைவியும் தம்முள் கூடுகின்ற காலத்துப் பிறந்து, அக்கூட்டத்தின் பின்னர் அவ்விருவராலும் ஒருவர்க்கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறிருந்ததெனக் கூறப்படாததாய் எப்பொழுதும் உள்ளத்துணர்வாலேயே அனுபவிக்கப்படும் இன்பம். அது, கைக்கிளை முதலாப் பெருந்திணையிறுவாய், முற்படக் கிளந்த வெழுதிணை யென்பர். எழுதிணையாவன: கைக்கிளை, முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல், பெருந்திணை. புணர்தலையும், புணர்தல் நிமித்தத்தையும் உணர்த்தும் திணையைக் குறிஞ்சித்திணை யென்பர். ஆகவே, குறிஞ்சிப் பாட்டு குறிஞ்சித் திணையைச் சார்ந்த தென்பது தேற்றம்.

கைக்கிளைக்கும் பெருந்திணைக்கும், நடுவே சிறப்புடைமை பற்றி நின்ற வைந்திணையும் மூன்று பொருளை யடக்கும். "முதல் கருவுரிப் பொருளென்ற மூன்றே, நுவலுங்காலை முறைசிறந் தனவே." அவற்றுள், "முதலெனப்படுவது, நிலம் பொழுதிரண்டின் இயல்பென மொழிப வியல்புணர்ந்தோரே." குறிஞ்சித் திணையின் நிலம், மலையும் மலையைச்சார்ந்த விடமுமாம். கூதிர்க் காலம் அதன் பெரும்பொழுதும், நள்ளியாமம் சிறுபொழுதுமாம்.

குறிஞ்சிப்பாட்டின் தலைவனுந் தலைவியும் கூதிர்க்காலத்தேயோர் மலைச்சாரலின்கண் ஒருவரை யொருவர் சந்தித்தனர். அன்றுமுதல், தலைவன் நள்ளியாமத்தே தலைவியினூர்க்குள் சென்றுகொண்டேயிருந்தனன்.

... ... பிறங்குமலை
மீமிசைக் கடவுள் வாழ்த்திக் கைதொழு
தேமுறு வஞ்சினம் வாய்மையிற் றேற்றி
அந்தீந் தெண்ணீர் குடித்தலி னெஞ்சமர்ந்து
அருவிட ரமைந்த களிறுதரு புணர்ச்சி

* * * *

எல்லை செல்ல வேழூர் பிறைஞ்சிப்
பல்கதிர் மண்டிலங் கல்சேர்பு மறைய

* * * *

வானமாமலை வாய்சூழ்பு கறப்பக் கானம்
கல்லென் றிரட்டப் புள்ளின மொலிப்பச்
சினைஇய வேந்தன் செல்சமங் கடுப்பத்
துனைஇய மாலை துன்னுதல் காணூஉ

* * * *

துஞ்சா முழவின் மூதூர் வாயில்
உண்டுறை நிறுத்துப் பெயர்ந்தன னதற்கொண்
டன்றை யன்ன விருப்போ டென்றும்
இரவரன் மாலையன்.

ஓரிடத்திற்குக் கருப்பொருள்களைவையெனத் தொல்காப்பியர் பின்வருமாறு உரைத்துள்ளார்.

"தெய்வ முணாவே மாமரம் புட்பறை
செய்தி, யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவும் கருவென மொழிப."

மலைச் சாரலின்கண்ணுள்ள வெள்ளத்தே பாய்ந்து கால் தளர்ந்த தலைவியைத் தலைவன் நீரினின்றும் நீக்கி, அவளச்சத்தைத் தணித்து அவளை முயங்கினன். அப்பொழுதவன் இல்லற அறத்தாற்றை யவளுக்குக் கூறி, "பிறங்குமலை மீமிசைக்" கடவுளாம் முருகனை வாழ்த்தினன். குறிஞ்சிநாட்டிற்கு முருகன் தெய்வமென்பதை, "சேயோன்மேய, மைவரையுலகமும்" என்னுஞ் சூத்திரத்தானுணர்க.

மலைநெல்லுந் தினையும், குறிஞ்சிமக்கட் குணவாகும். அவைகள் பறவைகளா லழிக்கப்படாதபடி, குறிஞ்சிமகளிர் தட்டையுங் குளிருங்கொண்டு புனத்தைக் காத்தல் வழக்கம். இப்பாட்டின் தலைவியும் அத்தொழிலை நடாத்துதற் கனுப்பப்பட்டாள்.

"நெற்கொ ணெடுவெதிர்க் கணைந்த யானை
முத்தார் மருப்பி னிறங்குகை கடுப்பத்
துய்த்தலை வாங்கிய புனிறுதீர் பெருங்குரல்
நற்கோட் சிறுதினைப் படுபு ளோப்பி
எற்பட வருதிய ரெனநீ விடுத்தலின்."

என்றாள் தோழியும் செவிலித்தாய்க்குத் தலைவியின் வருத்தத்திற் குண்மைக் காரணத்தை யுணர்த்தும் வண்ணம்.

இப்பாட்டில் குறிஞ்சிநிலத்தைச் சார்ந்த பூ வகைகளும், விலங்கினங்களும் மனத்தைக் கவரத்தக்கனவாய் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. தொண்ணூற்றொன்பது பூக்கள் ஒருசேரக் கூறப்பட்டுள்ளன. அவற்றையெலாம் பாட்டின் அறுபத்தோராமடிமுதல் தொண்ணூற்றொன்பதாமடி யீறாகக் காண்க. சிறப்பியல்பு தோன்றுமாறு ஏற்ற அடைகளுடன் சில பூக்கள் வர்ணிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் பின்வருபவை சில: 'வள்ளிதழொண் செங்காந்தள்,' 'எரிபுரையெறுழம்,' 'வான்பூங் குடசம்,' 'மணிப்பூங் கருவிளை,' 'பல்லிணர்க்குரவம்,' 'பல்லிணர்க்காயா,' 'தேங்கமழ் பாதிரி.'

விலங்கினங்களைப் பற்றிப் பின்வருமடிகளினின்று மறிக.

"அளைச்செறி யுழுவையு மாளியு முளியமும்
புழற்கோட் டாமான் புகல்வியுங் களிறும்
வலியிற் றப்பும் வன்கண் வெஞ்சினத்
திருமுன் கூரு மிரைதே ராவமும்
ஒடுங்கிருங் குட்டத் தருஞ்சுழி வழங்கும்
கொடுந்தாண் முதலையு மிடங்கருங் காரமும்
நூழிலு மிழுக்கு மூழடி முட்டமும்
பழுவும் பாந்தளு முளப்படப் பிறவும்"

புணர்தலும் புணர்தல் நிமித்தமும் குறிஞ்சித்திணையினுரிப் பொருள். தலைவியின் நோய் எவ்வாற்றானும் நீங்காதது கண்டு தாய் வருந்த, அவள் வருத்தத்தை யாற்றாளாய்த் தோழி காரணத்தை யுணர்த்தி மன்றல் வேண்டினாள்.

"இருவே மாய்ந்த மன்ற லிதுவென
நாமறி வுறாலிற் பழியு முண்டோ
* * * *
மாளமர் நோக்கங் கலங்கிக் கையற்
றானச் சிறுமைய ளிவளுந் தேர்பும்."

வாழையின் வண்மை.

உயர்திருவாளர் ராவ்ஸாஹிப்

G. இராஜகோபாலப் பிள்ளை F.R.H.S., அவர்கள்,

பெருநிலக்கிழார், பிச்சாண்டார்கோயில்.

2—2—'40உ வழங்கிய வானொலியின் முற்பகுதி.

பழம் என்றால் யார்க்கும் வாயில் நீர் ஊறுகின்றது. எடுத்துண்ணக் கையுந் தாவுகிறது. பழத்தொடு கலந்த பாலன்னத்தையே நம் முன்னோரும் சத்துவகுண வுணவாகக் கொண்டனர். தற்போதுள்ள மருத்துவப் பேரறிஞர்களும் பழந்தான் சிறந்த ஆகாரம், சத்து நிறைந்த பொருள்; அதையே அதிகம் உண்ணுதல் நலம் என்று அறைகூவுகின்றனர். ஆரஞ்சுப்பழச் சாற்றில் இரத்த விருத்தி செய்யக்கூடிய ஜீவாணுக்கள் (வைடமின்கள்) நிறைந்திருக்கின்றன. நம் தமிழ்நாட்டு விருந்துணவுகளில் சிறந்தவைகளாக விளங்குவன வாழை, மா, பலா என்னும் முக்கனிகளே. இம்மூன்றும் நம் நாட்டில் எளிதில் வளர்ந்து ஏராளமான பலனைக் கொடுக்கின்றன. மங்கல அலுவல்கள் எல்லாவற்றிலும் இவைகளே முன்னிற்கின்றன. கோயில்களிலும் திருவிழாக் காலங்களில் அலங்கரிக்கவும் அருந்தவும் இவை இன்றியமையாது வேண்டப்படுகின்றன.

வாழையில், பச்சைவாழை, செவ்வாழை, ஆயிரம்வாழை, கற்பூரவாழை, தேன்கதலி, மொந்தென், நேந்திரான், பூவன், இரஸ்தாளி எனப் பலவகைகள் இருக்கின்றன. ஒவ்வொரு வகையும் வெவ்வேறு பயன் தரும். அவ்வப்பயன் கருதி இவைகளை அங்கங்கே பயிரிடுகின்றனர். கோயம்புத்தூர் விவசாய ஆராய்ச்சிக்காரர்கள் இவ்வாழை வகைகளையும் பரிசோதித்து அதிக பயன் தருவனவற்றை வேண்டுவோர்க்கு அனுப்பிவருகின்றார்கள். நமது திருச்சிப்பக்கங்களிலிருந்து பூவன், ரஸ்தாளி முதலிய வாழைகள் வட இந்தியா முதலிய வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன. இதனால் வாழையின் பெருமை விளங்கும்.

இலைகளுக்கென்றும், பெருங்காய்களுக்கென்றும், சுவையுள்ள பழங்களுக்கென்றும் தனித்தனி வகையான வாழைகள் இருக்கின்றன. இவையெல்லாம் பெரும்பாலும் ஓரேவிதத்திற் பயிரிடப் பெறுகின்றன. இருந்தாலும் ஆற்றுப்படுகைத் தோட்டங்களில் வளரும் வாழை ஒருவிதம். நன்செய்யில் உண்டாக்கப்

பெறும் வாழை வேறுவிதம். புன்செய்க்கால் தோப்புக்களில் தண்ணீர் இறைக்கப்பெற்று வளரும் வாழைகள் மற்றொருவிதம். சில கொல்லைகளில் தண்ணீர் அதிகந் தேவையில்லாமல் சில வாழைகள் வளர்வதைப் பார்க்கின்றோம். மலையாளத்தில் மிகுந்த மழையும் வெப்பமும் பொருந்தி நல்ல நீர்வடிகால் வசதிவாய்ந்த செம்மண் மலைச்சரிவுகளில் உண்டாகும் நேந்திரனும், திண்டுக்கல் பக்கத்து மலைத் தோட்டங்களில் உண்டாகும் மலைப்பழமும் தனிப்பட்ட சிறப்புடையன.

வாழையை நடுவதற்கு இரண்டு மாதங்கள் முன்பே எழு அல்லது எட்டுமுறை நிலத்தை நன்றாக ஆழஉழுது புல், களை முதலியவைகளை நீக்கி எட்டடிக்கொரு குழிதோண்டிக் கன்று களைப் புதைக்கலாம். அல்லது தஞ்சை ஜில்லாவில் செய்வது போல் ஆழமாக வெட்டிவாங்கி வடிகால்களுக்குக் கிடங்குகள் பறித்து மேற்சொன்னபடி எட்டடிக்கொன்றாகக் கன்றுகளைப் புதைக்கலாம். பக்கத்துக் கிடங்குகளில் எப்பொழுதும் தண்ணீர் நின்றுகொண்டே இருப்பதை ஆடுதுறை முதலிய இடங்களில் காணலாம். வாழை நடுவதற்கு ஆடிப்பட்டமும் ஆகும்; தைப்பட்டமும் தகும். சிலர் நன்செய் வயல்களில் ஒரு போகம் நெல்லறுவடை ஆனதும், அவ்வயலிலேயே வாழைக் கன்றுகளை நூல்பிடித்துப் புதைத்து அவைகள் இரண்டிலைகள் விட்டபின், செய் நேர்த்தியாக முளைகளைக் கொத்தி மண்அணைத்துக் குப்பை வைத்துச் செடிகளை ஏற்றிவிடுவதும் உண்டு.

ஆற்றுவண்டல் படியாத நிலங்களுக்கு ஏகர் ஒன்றுக்கு முப்பது வண்டிக்குக் குறையாமல் எருவிடவேண்டும். கன்று களைப் புதைத்தவுடன் ஆட்டுக்கிடை அடரவைக்கலாம். ஏகர் ஒன்றுக்கு சுமார் எழுநூற்றைம்பது கன்றுகள் நடலாம். கன்று களைத் தாய்மரத்தினின்றும் பிரித்தவுடன் பச்சைமாறுமலும் நடலாம். ஒருமாதம் வைத்திருந்து நீர் வற்றியபிறகும் நடலாம். கன்றுகளைப் புதைத்தவுடன் குழிகளில் காற்றுப்புகாமல் இருப்பதற்கு உலக்கையால் இடித்துக் கெட்டிப்படுத்தல் வேண்டும். அல்லது சுற்றிலும் காலால் மிதித்துக்கொடுத்தல் வேண்டும். வாழைக்கு மொத்தம் நூறு தண்ணீர் என்பர். முதலாண்டில் மாதம் இருமுறைக்குக் குறையாமல் தண்ணீர் பாய்ச்சல் வேண்டும். பட்டம்கொத்தி மண் அணைக்கும்போது தோல்கிடங்கு எரு, வீட்டுக் குப்பை, சாணம், ஆட்டுப்புழுக்கை, பிண்ணாக்கு, வாழைக்கென வகுக்கப்பெற்ற இரசாயனக் கலவை முதலியவற்

றுள் ஒன்றை வைத்து அணைக்கலாம். வாழையின் மட்டைகளையும் பயனற்ற இலைச்சருகுகளையும் மீண்டும் எருவாகும்வண்ணம் சேமிக்கலாம். கன்றுகளைப் புதைத்த மூன்று மாதத்திற்கெல்லாம் கொத்திக் களைபிடுங்கி எருவிடவேண்டும். முதலாண்டில் நான்குதடவையாவது கொத்துதல் நலம். நிலத்தின் நிலைமைக்குத் தக்கபடி ஆறுமுறையும் கொத்தவேண்டி இருக்கும். இரண்டாவது மூன்றாவது ஆண்டுகளில் ஆண்டொன்றுக்கு இரண்டு அல்லது மூன்றுதரம் கொத்தினால் போதும். தாய்மரம் பூவிடும் வரைக்கும் பக்கத்துக் கன்றுகளில் ஒன்றைமட்டும் விட்டுவிட்டு மற்றைய எல்லா இடக் கன்றுகளையும் தலையரிந்துவிடல் வேண்டும். காய் வெட்டப்படுகிற வரையில் தாய்மரத்தில் குருத்து, இலை, மட்டை முதலியவற்றில் ஒன்றையும் அறுக்கலாகாது. வாழை ஓராண்டுப் பயிர். எட்டாவது மாதத்தில் பூக்கும். பன்னிரண்டாவது மாதத்தில்தான் குலைகள் முற்றும். பதின்மூன்றாவது மாதத்தில் அவற்றை வெட்டலாம். கீழ்க்கன்றுகள் முறைப்படி மூன்றாண்டுகள்வரை அதேயிடத்திலிருந்து பயன்தரும். நன்செய் வயல்களிலும் மாற்றுப்பயிராக வாழையையும் கரும்பையும் பயிரிட்டுவரின் வயலின் மண் வயணம் ஓங்கும்.

வாழைமரம் கிழங்கு, தண்டு, மட்டை, இலை, பூ, கச்சல், பிஞ்சு, காய், பழம், சருகு, நார் முதலிய எல்லாவற்றாலும் நமக்கே முழுதும் உதவியாகி, நாமும் அதன்கீழ்க் கன்றுகள்போல் என்றென்றும் நமக்கும் பிறர்க்கும் பயனுண்டாம்படி வாழ்ந்துவரல் வேண்டுமென்னும் வாழ்க்கை நிலையை நினைவூட்டுகின்றது. இதன் நாரினால் மடியாடை நெய்யப்படுகின்றது. காயை மாவாக்கித் தின்பண்டங்கள் செய்கின்றனர். பழங்களில் வற்றலும் செய்யப்பெறுகின்றது. தண்டு வயிற்றிலுள்ள கல்லைக் கரைத்து வெளிப்படுத்துகின்றது. பட்டையின் சாறு சிறந்த விஷமுறிப்பு. கிழங்கின் நீர் சூட்டைத் தணிக்கும். அதிமூத்திரத்தை நிறுத்தும். கச்சல் சிறந்த மருத்துவ உணவாம். ஆதலின் நம்நாட்டு கல்பதருக்களில் உயர்ந்ததாகிய இவ்வாழையின் வண்மை என்னே!

இவ்வரிய மரத்தின் உயரிய குணங்களை உணர்ந்தே திருச்சிக்கடுத்த திருப்பைஞ்ஞீலி என்னும் காட்டுத்தலத்தில் வீற்றிருந்தருளும் ஆரணியநாதனுக்கு முனிவர்களும் வாழைவடிவங்கொண்டு தொண்டாற்றுகின்றனரெனப் புராணங்கள் புகல்கின்றனபோலும்.

வண்தமிழ் வள்ளியோர் வாழையடி வாழையாக வாழ்க!

கமலைநாதன்.

"சுந்தரி"

நள்ளிரவு, ஆனால் இருள் இல்லை. நிலவு காய்ந்துகொண்டிருக்கிறது. பழனியாண்டவர் திருமுன்னர் ஒரு வாலிபன் உட்கார்ந்திருக்கிறான். முகம் ஏதோ ஒரு அடாதசெயல் நடந்ததைக் குறிக்கிறது. தன்னைத்தானே இழிவாக நினைத்துக்கொள்கிறான்; வெட்கமடைந்து முகத்தைக் கையால் மறைத்துக்கொள்கிறான்; வருத்தம் பீறிட்டு வெளிக்கிளம்புகிறது. அடக்கிக்கொண்டு ஏதேதோ முணுமுணுக்கிறான். "அவளுக்கு இத் துணிச்சல் எப்படி வந்தது? என்னுடன் இருந்தவரையில் மிகச் சாதுவாக இருந்தாளே. பலரிடத்தில் பழகி அறியாள்; பலருடன் பேசியறியாள். அவள் குதூகலமாகப் பேசினாள் என்றால் அது என்னுடன் தான். எங்களுக்கு மணமாகி எட்டுமாதம் முடிவதற்குள் எட்டாமற் போய்விட்டாளே! நான் அறிய அவள் மனம் சஞ்சலப்பட்டதும் கிடையாது; கோபித்ததும் கிடையாது. திடீரென அவள் மனமாற்றத்துக்குக் காரணமென்ன? என்னசெயல் செய்துவிட்டாள்! அன்று நடந்துகொண்டதை நினைத்தால் இன்றும் வியப்பாகவேயுளது. போலீஸ் கச்சேரி, இன்ஸ்பெக்டர், ஜவான்கள், மாமனார், கணவன் முன்னிலையில் பேசியது கமலவேணிதானா? பலரறிய பச்சைப் பந்தரின்கீழ் அம்மிமிதித்து, அருந்ததி நோக்கி அடைந்த கணவனை வெறுப்பதா? அவன் உறவு வேண்டாமென்று மறுப்பதா? என்னே! விபரீதம்! கொண்ட கொழுநனே எல்லாவற்றிலும் சிறந்த பொருள்; போற்றத்தக்க தெய்வம் என்று அறைகூவும் பாரதநாட்டில் பிறந்த பெண்மணியின் சொற்களா இவைகள்! 'பழையது சுடுகிறது, விசிறிகொண்டு வா,' என்ற வார்த்தைகள் வழக்கிற்கு முரண்பாடாயிருந்தும், கணவன் வார்த்தை தட்டாமல் விசிறிகொண்டேகிய கற்பரசியார் வாழ்ந்த நாடன்றோ இது! அதனாலன்றோ பழைய சாதத்தினின்றும் ஆவி கிளம்பிற்று! ஏ, ஈசா! இதுவும் உன் திருவிளையாடல்களில் ஒன்றுதானா? மலைதனில் உறையும் மணியே மகிழ்வுடன் சொல்வாய்! யான் அறியாது அவளுக்குத் தீங்கிழைத்தேனோ? அறிந்து செய்திலேன் என்பது திண்ணம். என் மனம் கலங்குகிறது. நான் ஒரு பாபிதானா சொல், தெய்வமே."

"இல்லை, இல்லை; நான்தான் பாபி," என்றது ஒரு பெண்ணின் இனிய குரல். திடுக்கிட்டான் நம் திலகநாதன். இது தான் அவ்வாலிபனின் பெயர். கண்களைத் துடைத்துக்கொண்டான். எதிரில் ஒரு மெலிந்த உருவம் வெள்ளை உடை தரித்து நின்றது. தேவதையோ என மருண்டான்; கீழே குனிந்த அவ்வுருவம் நிலத்தில் விழுந்து கால்களைப் பிடித்தது. மெய் தட்டுப் பட்டு மானிட உருவம் எனத் தெளிந்தான். பெண்ணுகலின் யாது செய்வதெனத் தெரியாது திகைத்தான். ஒருவாறு மனந் துணிந்து மேலே தூக்கி நிறுத்தினான். சிலைபோல் நின்றது அவ்வுருவம். கைகளெல்லாம் விறைத்திருந்தன. அங்க முழுதும் சில்லிட்டிருந்தது. அச்சம் கொண்டான்; மனம் தடுமாறினான்; கீழே உட்கார்ந்தான்; அப்பெண்ணை மெல்லப் படுக்கவைத்தான். தலை மடிமீதில் ஒய்வெடுத்தது. வாசற்படி அருகில் இருந்த தண்ணீரை வாரி முகத்தில் இறைத்தான். உற்று நோக்கினான். ஆ! கமலாவெனக் கதறினான். கண்களில் நீர் வடிந்தது; இருவர் முகங்களும் ஒன்றுபட்டன. வடிந்த நீரின் சூடு கமலாவின் உணர்வைத் தட்டி எழுப்பியது. அசைந்த உடல் நம் நாதனையும் எழுப்பிற்று.

இருவரும் எழுந்து உட்கார்ந்து ஒருவரை ஒருவர் நோக்கினர். அன்பின் மிகுதியினால் அகமிக மகிழ்ந்தனர். "கமலா, இந்நேரத்தில் இங்கு ஏன் வந்தாய்? தனியாய் வந்தாயா? துணை யாராவது வந்திருக்கிறார்களா? நான் இங்கிருப்பதைத் தெரிந்து வந்தாயா அல்லது எதிர்பாராத சந்திப்பா?" என நாதன் கேள்விகளை அடுக்கிக்கொண்டே போனான். முற்றுப்புள்ளி வைப்பதற்கொப்பக் கமலாவின் பெருமூச்சுகளும், விம்மலும் ஓங்கி எழுந்தன. தழுதழுத்த குரலில் தத்தித்தத்தி பேசலானாள். "நாதா, என்னை மன்னியுங்கள்; நான் ஒரு பாபி. எதிர்பாராமல்தான் நாம் இங்கு சந்தித்துள்ளோம். எல்லாம் இறைவன் அருள். நானொன்று நினைக்க அவர் வேறொன்று செய்துவிட்டார்."

"என்ன, புதிர் போடுகிறாய்! எதிர்பாராமல் நடந்ததா? என்ன நினைத்து வந்தாய்?" "நாதா, கேலி பண்ணுகிறீர்களே! துக்கம் மார்பை அடைக்கிறது. தொண்டையைப் பிடிக்கிறது. தயவுசெய்து மன்னியுங்கள்; நான் செய்ததெல்லாம் தவறு. அதன் உண்மையை அறிந்தால் தங்கட்கு மன இரக்கம் உண்டாகும். ஆனால் எவ்வாறு எடுத்துக் கூறுவேன். என் மனநிலை

வார்த்தைகளை வெளியிட மறுக்கிறது, நாதா!" என மேலே சாய்ந்துவிட்டாள். "கண்மணி," என்று மார்போடணைத்து "நீ கள்ளங்கபடற்ற செல்வி என்பதை அறிவேன். உன் தாயும் தமையனும் உன் சுதந்திரத்தை அடக்கினர்; உன் மனதைக் கெடுத்தனர். கெடுமதி மதுவினும் தீமைமிக்குளது. நடந்ததை மறந்து மனத்தேற்றங் கொள். இங்கு வந்துற்ற விதத்தை எடுத்துரைப்பாயாக," என்றான் கமலநாதன்.

மனத்தேற்றமுற்ற கமலவேணி, ஒருவாறு கூறத்தொடங்கினாள். "நாதரே, என் நிலைமையைச் சரியாக ஊகித்துக்கொண்டீர். என தாயும் தமையனும் வற்புறுத்தி என் வாயினின்று பல வார்த்தைகளை வெளிப்படுத்தி விட்டனர். கச்சேரியில் நின்ற அச்சமயம் என் மனம் நன்கு இருந்ததாக நான் நினைக்கவேயில்லை. வீடு சேர்ந்ததுதான் தாமதம். என் நடத்தை என்னை வாட்டத் தொடங்கியது. வாள்கொண்டு அறுத்ததுபோன்ற உணர்ச்சிகள் உடலில் தோன்றின. அன்று படுத்த இடத்தைவிட்டுச் சற்று முன்புதான் எழுந்தேன். உலகத்தைக் காண வெட்கமடைந்தேன். இவ்வாழ்வை நீத்தால் பிறிதொரு வாழ்விலாவது சுகங் கிடைக்குமா என்று எண்ணினேன். ஏதோ ஒரு சக்தி என்னை வீட்டைவிட்டு அப்புறப்படுத்தியது. உலகைத் துறக்குமுன் கடவுளைக் காண்போம் என்று இங்கு வந்தேன். ஏதோ மனிதக் குரல் கேட்டுத் திடுக்கிட்டேன். சுவரின்மறைவில் நின்று வார்த்தைகளைக் கவனிக்கலானேன். குரலும், வார்த்தைகளும் பேசுபவர் தாங்கள்தான் என்பதைத் தெளிவுபடுத்தின. அடுத்தவாழ்வில் அடைய நினைத்ததை எனக்கு இப்போதே இறைவன் அருளினார். இதை நினைத்தவுடன் உடல் சிலிர்த்தேன். எவ்வாறு தங்களை அணுகுவது என்று சிந்தித்தேன். 'நான் பாபியா' என்ற வார்த்தைகளைக் கேட்டதும் என்னையும் அறியாமல், 'நான்தான் பாபி'; என்ற வார்த்தைகள் வெளிப்பட்டன. பின்னர் நடந்தவை தாங்கள் அறிவீர்."

"இறைவன் காட்டிய வழிதானா இது! உன்னை என் வீட்டுக்கு அழைத்துவரவேண்டிய முயற்சிகளில் தோல்வியுற்றேன். என் மனம் நிம்மதியிழந்தது; கலக்கங் கொண்டது; பித்தனைப் போலானேன். அவற்றை நீக்க இவ்வேலனால்தான் முடியும். அவனிடம் செல்வோம் என்று எண்ணினேன்; வந்தடைந்தேன்; ஏதேதோ பிதற்றினேன். என்னே இவன் கருணை! உன்னையே

அனுப்பியருளினன்" 'எனப் பலவாறு அவனருளைப் புகழ்ந்து, இனி எங்ஙனம் நலமாக வாழ்வதென்பதைச் சிந்திக்கலாயினர். ஒருவரும் அறியா நாடடைந்து தனிவாழ்க்கையை ஆரம்பித்தலே சிறந்ததெனத் தெளிந்தனர். அப்போதே பயணப்பட்டுக் கால் நடையாகவே கதிரவன் வருமுன் ஊர் எல்லையைத் தாண்டிச் செல்லலாயினர்.

மாதர் வெளியீடுகள்.

திருமதி. S. லக்ஷ்மி, சேலம்.

—:o:—

இந்நாளில் தமிழ்மகளிர் பத்திரிகைப் படிப்பைப் பெரிதும் விரும்புகின்றனர். பத்திரிகைகளும் பல வெளியிடப்படுகின்றன. ஆனால் தமிழ் வளர்ச்சியைக் கடனாகக்கொண்ட வெளியீடுகள் சிலவே. அவற்றில் மாதர்க்குரிய பொருள்கள் நிறைந்தில. ஆகையால் மகளிர் அறிவுபெருகவேண்டி பெரும்பகுதியுடைத்தாய், விலைமலித்தாய் வெளியீடுகள் வெளிவரல்வேண்டும். மொழிவளர்ச்சிக்குப் பெண்களே அடிகோலுபவர். ஆடவர்க்கு உழைப்பதே பிழைப்பாகையால் படிக்க ஓய்வில்லை. மேலும் வருங்கால உலக ஆக்கத்தின் பச்சிளங்குழவியாம் பயிரைப் போற்றி வளர்ப்பவர் அவர்களே. அறிவுக்கனி தர அப்பயிர்க்கு எருவிடுபவரும் அவர்களே. அவர்களின் இனிய செஞ்சொல்லே தமிழ்ப்பயிர் தழைக்கச் செய்யவல்லது; தமிழ்மணம் கமழச்செய்வது. ஒழுக்கம் நிலவுவதும் அவர்களாலேயே. தாயறிவே மகளறிவாம். ஆகையால் பெண்களுக்குப் பயன்பெறும் வகையில் வெளியீடுகள் வெளிவரல் வேண்டும்.

இனி, பெண்களுக்கென ஒதுக்கப்படும் பகுதியில் ஒழுக்கத் திறங்களைப் பலவகை இலக்கியக்கதைகளும், இல்லறத்தை நல்லறமாய் மாண்புறச் செய்யவல்ல அறிவுதரும் கட்டுரைகளும், இசை, நாட்டியம், ஓவியம் முதலிய இன்கலைகளும், எழிலோம்புதற்கேற்ற முறைகளும், சுகாதாரம், மருத்துவம் முதலிய முறைகளும், உணவாக்கும் உயிர்த்தொழில் சிறப்புகளும் வெளிவரல்வேண்டும். ஆடவர் ஆண்மை செலுத்தவும், தொழிலிற்றலைப்படவும் தூண்டுவது பெண்மையே. பெண்மைநிலவைப் பல வெளியீடுகள் முன்வரல் வேண்டும். பெண்களும் பெண்மை நிலவவேண்டிப் பேய்க்குணமும் பிழைபாடும்போக்கப் பாடுபடல்வேண்டும். அதற்காக ஊர்தோறும் மாதர் சங்கம் நிறுவுதல் வேண்டும்.

ஆரணத் தமிழ்மறை.

வித்வான் திரு. K. S. சிவராம ஐயரவர்கள்,
தமிழ் விரிவுரையாளர், இஸ்லாமியா கல்லூரி, வாணியம்பாடி.

வேதம், ஆரணம் என்றும் பெயர்பெறும். அது ஞான பாகம், கன்மபாகம் என இருதிறப்படும் ஞானபாகம் கன்ம பாகத்தினும் சிறந்ததாம். ஞானபாகத்தைமட்டும் ஓதிப் பொருள் தெளியின் தலையாய பயனுண்டெனக் கூறற்கியலாது. ஞான பாகத்தை அறியுமுன் கன்மபாகத்தை அறிந்து, கன்மத்தால் கன்மத்தொடர்பு அறுக்கவேண்டும். இந்நிலையைச் "செய்யாமல் செய்தல்" என அறிந்த யோகியர் கூறுவர். இதுதான் பற்றுள்ளம் நீங்கிய நிலை. இந்நிலையான் மனம் ஒருப்படும். ஒருப்பட்ட மனம் நேர்மையான நெறியைப் பின்பற்றும். உண்மை காணும் நெறியும் அதுவே. வேதங்களும் உபநிஷதங்களும் இந்நெறியையே மக்கட்கு உறுதியுடைத்தெனக் கூறும்.

தெய்வத் தமிழ்மொழியில் ஆரணமேபோன்ற திருக்குறள், தேவாரம், திவ்வியப் பிரபந்தம் முதலிய மூன்றும் கன்மநெறியையும் ஞானநெறியையும் ஐயந்திரிபற அறிவுறுத்துவனவாம். தெய்வப் புலவரும், உபநிஷதமொழிகள் உறுதிசெயும் "நேதி" எனும் சொற்பொருட் கேற்ப

"அடல்வேண்டு மைந்தின் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய வெல்லா மொருங்கு"

"யாதனின் யாதனி னீங்கியான் நோதல்
அதனி னதனி னிலன்"

என்று "துறவு" எனும் அதிகாரத்தான் முன்னர் வாய்ப்பறை சாற்றிப் பின்னர்வரும் "மெய்யுணர்தல்" எனும் அதிகாரத்தான்

"எப்பொருள் எத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்றும்,

"பிறப்பென்னும் பேதமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு"

என்றும், "வீடுபேறு" அடையும் நெறியையும் சுட்டி நம்மை ஆற்றுப்படுத்துகின்றார்.

உபநிஷதப் பொருண்மொழிகளும், தெய்வத் தமிழ்மறைகளும் நமக்கு "ஆப்தர்மொழி" ஆவன. ஆப்தர்மொழி அறிவுறுத்துவது "சிறப்பெனும் செம்பொருள்." இதனை இருள்புலரச் செஞ்ஞாயிற்றின் தோற்றமும் ஒளியும்போல் புரைதீர்ந்த மனத்தான் உணர்ந்து இறையொளி காணலும் கலத்தலும் இயலும். உபநிஷதச் சொற்றொடர் "தத்வமஸி" எனும் பொருண்மொழி குறிக்கும் உண்மையும் அதுவே. சொலற்கு எளிது; ஆயினும் அந்நிலை அடைதற்கு அரிது. உணர்ந்தார்க்கும் உணர்வரிது. "உணர்ந்தார்க்கு முணர்வரிய திருச்சிற்றம்பலத் தொருத்தன்" என வாதவூரடிகள் இறைநிலைக்கு இலக்கணம் இயம்புவர். திருமங்கை மன்னனும் "உயர்வற உயர்நலம் உடையவன்", "மனனுணர் வறைவிலன் பொறியுணர் வவையிலன்" என்றும் இறைப்பொருட்கு இலக்கணம் வரைவர்.

வேதத்தில் விதித்த கன்மவிதித் துறைகள் பல. அவற்றைப் புரைதீர்ந்த நிலையில் அறிவதும் செய்வதும் அரிது. வாழ்நாள் சிலவே பெற்ற கலியுக மாந்தர்க்கு மிக எளிய நெறியை ஆன்றோர் வகுத்துளர். அதுதான் அன்புநெறி. கண்ணனும் கீதையில் கனிந்த சொற்களால் அந்நெறியையே அர்ச்சுனனுக்கு அறிவுறுத்துகின்றான். வடமொழியில் அது "பக்தியோகம்" எனப்படும். பக்தியோகமாகிய அன்புநெறியினும் கன்மம் நீங்காது பற்றிநிற்கும். செய்யும் கன்மங்கள் தூயனவாய் எல்லாவுயிர்க்கும் நன்மை விளைப்பனவாய் அமையின் நன்மையே. விளைவில் பற்றுள்ளம் இலாது கடமையெனச் செயல்புரிதல் மிகவும் நலமே. இருமைகளற்றுத் துன்பத்தைத் துன்பமென்றும், இன்பத்தை இன்பமென்றும் நினையாது அனைத்தும் "அவனே" என்று யான் எனது எனும் உணர்வு அற்று

"இகழ்பவர் நட்டாரென்ப தின்றியே இன்பதுன்பந்
திகழவ மானமானஞ் சீதமோ டுழலின்தீமை
புகழ்பழி யிவற்றுளொத்துப் பொருந்திவா ழிடமொன்
நிகழ்தரும் ... ..." [றின்றி

யோகியாய் நிற்பவனே சிறந்த பக்தன்; அவனே இறைக்கு இனியான். இறையை நினைப்பதும், துதிசெய்வதும், கூட்டுமுயலுத

லும், பரவசமடைதலும், பிரிவினுக்கு ஆற்றாது வருந்துதலும், அவசமுற்றிருத்தலும் ஆகிய இச்செயல்களே அன்புநெறியைப் பற்றிய அடியார்கள் செயல்களாம். இந்நிலைதான் கன்மயோகமும் ஞானயோகமும் கைவரப்பெற்ற பக்தியோகம் என்று கீதையும் கனிந்த சொற்களால் கூறும்.

இத்தகைய அன்புநெறி ஐவகைப்படும். அவை தொண்டு நிலை, தோழமைநிலை, அன்புநிலை, தலைவிநிலை, நடுவுநிலை என வழங்கும். இவ்வைவகை நிலைகளிலும் இருந்து சைவ சமய குரவர்களும், ஆழ்வார்களும் தாம் துய்த்த பேரின்ப உணர்ச்சியாகிய அனுபவத்தை அன்னாருளங்கனிந் துருகிப் பாடிய திருப்பாசுரங்களை அகக்கண்கொண்டு ஆராயின் ஓரளவில் உணர்ந்து அவர் பெருமையை அறியலாம்.

(தொடரும்)

அருளுரைகள்.

உலகில் உயர்ந்த செயல்கள் அனைத்தையும் செய்துமுடித்தவர்கள் மனிதர்கள். அவர்கள் உன்னையும் என்னையும் போன்றவர்களே. ஆண்மைமட்டும் இருந்தால் நம்மைப்போன்ற மக்கள் எதையும் செய்துமுடிக்கலாம். ஆதலின் உறுதியை மேற்கொள். எழுந்திரு! விழித்திரு! எண்ணிய எண்ணம் இனிது முடியும் வரை உழைத்திடு!

* * * *

குழந்தாய்! நாம் வேண்டுவன யாவை தெரியுமா? இரும்பினைப்போன்ற தசைநார்கள்; எஃகினையொத்த நரம்புகள்; இவற்றுடன் பிடுக்கமைந்த உடல் நலம். அதற்கிடையே இடியேறு போன்றிறுகிய மனம், ஆற்றல், ஆண்மை, அரசவீரியம், தெய்வத் திகழ்ச்சிமிகுந்த முகமலர்ச்சி இவையே நமக்கு வேண்டும்.

* * * *

எப்பொழுதும் தன்னம்பிக்கையைத் தழைக்கச் செய்யுங்கள். தீரச் சிறுவர்களே! நீங்கள் அரும்பெருஞ் செயல்களைச் செய்யப் பிறந்தவர்களென்று நம்புங்கள்! உண்மையில் நீங்கள் என் குழந்தைகள் ஆனால் யாதொன்றுக்கும் அஞ்சமாட்டீர்கள் சிங்க ஏறுபோன் றிருப்பீர்கள். நம் நாட்டைமட்டுமன்று — இவ்வுலக முழுவதையும் நாம் எழுப்பி ஆதல் வேண்டும்.

—விவேகாநந்தர்.

நல்லவை நாற்பது.

நல்லை. திரு. அ. இளங்கோவன், அவர்கள்.

பாயிரம் முதலியன தனிநூலில் வரும்.

நல்லார் திருப்பெறுதல் நன்றெளியோர் என்றென்றும்
வல்லார் தொடர்புற்று வாழ்வதுநன் றாடவர்கள்
நல்லார் துணைகொள்ளல் நன்றறந்த நல்லார்நூல்
வல்லார் எனவதிதல் நன்று. (1)

செல்வம் பெருகுதொழில் செய்வது நன்றுபல
மல்லல் வளம்நாட்டில் மன்னுதல்நன் றாள்பவர்கள்
கல்வி நெறிமுறைகள் கற்றொழுகல் நன்றன்னார்
நல்ல வழிச்செல்லல் நன்று. (2)

இறந்தே விடினும் இரவாமை நன்று
மறந்தேனும் பொய்ம்மை வழங்காமை நன்று
சிறந்தோர் செலும்வழியிற் செல்லுதல்நன் றெங்[illegible]குந்
துறந்தோர் தொகைமிகுதல் நன்று. (3)

பகுத்தறிதல் நன்றுபல பாஷைகளில் தேர்ச்சி
மிகத்தெளிதல் நன்று விழுப்பொருள்கள் சாலத்
தொகுத்தல்நன் றின்சொற்கள் சொல்லுதல்நன் றென்றும்
பகைத்தவர்க் கன்புசெயல் நன்று. (4)

குடிசைத் தொழில்கள் கொழித்தெழல்நன் றெங்கும்
அடிமைக் குடிவாழ்க்கை அற்றொழிதல் நன்று
கடமைச் சிறுமை கருதாமை நன்று
மடமைக் குணம்மாய்த்தல் நன்று. (5)

கற்கத் தவறாமை நன்று கலையறிவை
நிற்கத் தழைவித்தல் நன்று நியாயமுற
விற்கத் தகுந்த விலைகூறல் நன்றொருவர்க்
கொற்கத் துதவுதல் நன்று. (6)

செய்தற் கரிய செயல்செய்தல் நன்றெவரும்
செய்தற் குரிய திருந்தச் செயல்நன்று
நெய்தற் றொழிலை நிகழ்த்தல்நன் றெல்லோரும்
உய்தற் குழுதொழில் நன்று. (7)

கால மழைபொழிதல் நன்று கழிந்தோடும்
ஆல முறைய அகழ்ந்துழல்நன் றூற்றின்மேற்
பாலம் பதிவித்தல் நன்று பயிரிடுவோர்
கூலம் பலவித்தல் நன்று. (8)

நாட்டிற் குடியரசு நாட்டுதல்நன் றேர்பூட்டும்
மாட்டிற் பொருத்தங்கள் வாய்த்தல்நன் றெஞ்ஞான்றும்
வீட்டிற் கிசைந்த விரகுறல்நன் றெவ்வெவரும்
பாட்டிற் பயிற்சிபெறல் நன்று. (9)

உழைப்பாளி கூலி உயர்வடைதல் நன்று
களைப்பாளி ஓய்விற் களித்திருத்தல் நன்று
களிப்பாளி ஆகுலமும் கண்டறிதல் நன்று
பழிப்பாளி பண்படுதல் நன்று. (10)

தேசாபி மானஞ் சிறத்தல்நன் றெல்லோரும்
பாஷாபி மானம் படைத்தல்நன் றான்றோர்முன்
கூசாமை நன்று கொழுநர்க் கெதிர்மடவார்
பேசாமை நன்றுநாண் பெற்று. (11)

சங்கமுற நற்றொண்டு சாதித்தல் நன்றிலஞ்சம்
பங்கமுற வாங்கிப் பழகாமை நன்றரிய
பங்காளி யோடு பகையாமை நன்றொருவன்
மங்கையரோ டுற்பவித்தல் நன்று. (12)

போரொழுப்புந் தீமை பொருந்தாமை நன்றிந்தப்
பாருலகோர் ஒன்றிப் பழகிவரல் நன்றுநிறம்
வேறெனினும் பேதம் விரும்பாமை நன்றரிய
வீறுடையார் வாழ்வடைதல் நன்று. (13)

கலவை மணத்தாற் கலந்தொளிரல் நன்று
புலவர் உரையேற்றுப் போற்றிவரல் நன்று
பலபே ருரைக்குப் பணியாமை நன்று
தலைவ ருரையேற்றல் நன்று. (14)

சாதி மதபேதம் சாதல்நன் றுடவர்போல்
மாதர் சமத்துவமே மன்னல்நன் றிந்நாட்டின்
மானம் நிலைக்க மறுமணம்நன் றெஞ்ஞான்றும்
ஞானம் பெறவாழ்தல் நன்று. (15)

(தொடரும்)

பொருந்துமா? திருந்துமா?

ஒரு நவீன வாலிபன்; பெண்பித்து மேற்கொண்டு காம வலையிற்சிக்குண்டோன்; நாளும் பலவித உடை தரித்துக் குதிரைமீ தேறி வீதிதோறும் அலைகின்றான். தண்ணீர் முகந்துசெல்லும் பெண்களின் முன்னும் பின்னும் செல்கிறான். சீழ்க்கை அடிக்கி றான்; கண்களை இமைக்கிறான்; முறுவல் கொள்கிறான்; பெண்கள் சிலர் தங்களை மறந்து மனதை அவன்பால் விடுக்கின்றனர். எதிரில் வருவோரையும் கவனியாது பாட ஆரம்பிக்கின்றனர். உடன் செல் கின்றனர். வீட்டிலிருந்து வெளிவந்த ஒருபெண் பாட்டுக்கிசைந்து நாட்டியமாடுகிறாள். இந்த லீலைகள் ஒன்றையும் அதே ஊரில் வசிக்கும் மனைவி அறிவதில்லை கணவன் களங்கமற்றவன் என்பதி லிருந்து மாறுவதில்லை இந்த யோக்கிய சிகாமணி தாசிப்பெண் ணுடன் உரையாட இடமின்றி வீட்டுக்கழைத்து வருகிறான். ஆண் நாட்டியக்காரன் பெண்வேடம் தரித்துளான் எனப் பேதை மனைவியை ஏமாற்றுகிறான்.

தாசி மது கொடுக்கும்போது, தனக்குப் பழக்கமில்லை; மனைவியறிந்தால் கோபிப்பாள் என மறுக்கிறான். கோபவலை வீசிய தாசிமுன் வாயில்வைத்த போக்கில் மனங்கூசாது காலிசெய்து விடுகிறான். இது முதன்முறை மது உண்போனின் செயல்.

தனவந்தன். வசிப்பது மாடிவீடு. நவீனமுறையில் அலங் கரிக்கப்பட்டுள்ளது. வெளியேபோகக் குதிரையும், காரும். ஆனால் வீடு சுத்தம்செய்தலும், காய்கறி வாங்கிவந்து இன்னமுது படைத் தலும், மாடு கரக்கல், கொட்டில் சுக்கம் செய்தல், பசுக்களுக்குப் புல், தண்ணீர் வைக்கல் யாவும் மனையாளின் கடன்.

காதலனும், காதலியும் ஒருவர்மீதொருவர் நீரைக் குழாய் கொண்டு பீச்சுகின்றனர். ஆனால் அவர்கள் உடையோ, உடலோ நனைந்ததாகத் தெரியவில்லை. சமிக்கைகள்மட்டும் தெரிகின்றன.

இவை முப்பது வாரமாகச் சென்னையைப் பாழ்படுத்திவரும் "ஹரிதாஸ்" என்னும் தமிழ்ப் படத்தில் உள்ளன. இங்ஙனம் படக்கலையை மடக்கலையாக்குதல் முதலாளிகளுக்குத் தகுமா? கலை முன்னேறுமா? கடவுளின் பெயரால் நாட்டைக் கெடுத்தல், சமூகத்தைக் கெடுத்தல், உண்மைநிலை உணராதார் தமிழ்மக்களை வெறுத்தல் முதலியன படமுதலாளிகளின் பையை நிறைக்கப் பொருந்துமா? அன்றி இந்நிலை என்றேனும் திருந்துமா?

மனத்திற்கிசைந்த மணம்.

மலர்க்கொடி.

இந்நாள் என் வாழ்க்கையில் ஒரு நன்னாள். இன்றே நான் நல்லவளானேன். களிப்பும் அமைதியும் என் மனத்தில் இடம் பெறுகின்றன. முன்செய்த புண்ணியத்தால் ஒரு சிறிது படித்தேன். அப்படிப்பு என்னை உபாத்தினியாக்கப் போதியதாய் இருந்தது. மாதம் 25 ரூபாய் ஊதியம் கிடைத்தது. இதனால் அகந்தை அடைந்தேன். எனக்கு வேண்டியவைகளை யானே தேடிக்கொள்ள முடியும் என நினைத்தேன். ஆடவரிடம் அடிமைப்பட்டால் அல்லல்பட நேரும் என்று மணஞ்செய்துகொள்ள மறுத்தேன். கன்னிப் பெண்ணாகவே காலங்கழிக்க எண்ணினேன். ஒருவரை மணந்தால் அவர் சொல்லியபடி நடத்தல் வேண்டும்; அவர் மட்டுமா? மாமன், மாமி, மைத்துனன், மூத்தார், ஓத்தாள், ஓர் அகத்தி, நாத்தி முதலிய எல்லோரும் இட்ட ஆணைகளைத் தட்டாமல் கேட்டு நடக்கவேண்டும்.

கணவன் மனைவியுடன் சிறிது இனிமையாகப் பேசிவிட்டால் அவரை இடித்துரைத்துப் பேசுபவர் எத்தனைபேர்! "நேற்று வந்தாள், பொடி வைத்துவிட்டாள்; அவளுடன் கொஞ்சிக் குலாவினால் போதும். இவர்களுக்குச் சமைத்துப்போட மாமி இருக்கிறாள்; உணவு, பொருள் தேட மாமனார் இருக்கிறார். உடைதுவைக்கவும், வீட்டை அலங்கரிக்கவும் நாத்தி இருக்கிறாள்" என்று பலவாறு ஏசுவார்கள். அன்றியும் தற்காலத்தில் நடக்கும் அலங்கோலங்கள் எனக்கு மணவாழ்க்கையில் வெறுப்பு விளைவித்தன. தற்காலத்தில் தம்பதிகளுக்கு வேளாவேளைக்குத் தேநீரும், காரும் வேண்டியிருக்கின்றன. அம்மாமார்களும் ஐயாமார்களும் புறப்பட்டால் எந்த தோட்டமோ! எந்த நாடகசாலையோ! கார் போகும் வழியெல்லாம் அவர்கள் மனம் போகும். இரவில் வீடு திரும்பி உண்பதற்கு இலையில் உட்கார்ந்தால், "சாம்பாரின் மோரையைப் பார்; பொரியல்செய்த கை உலக்கையோ" என்ற ஏச்சும்பேச்சும் எங்கும் கேட்கிறோம். "இவர்களை வலையில்போட்டுப் பணம்பிடுங்க ஓட்டல்காரன் காத்திருக்கும்போது என் சமையல் எந்த மூலைக்கு" என்பனபோன்ற சொற்களைக் காதில் கேட்க வேண்டும். இதைவிடக் கன்னிப்பெண்ணாகவே வாழ்ந்தால் நலமாக இருக்கும் என்று எண்ணினேன். அதனால் பெற்றோர்

சொல்லை மறுத்தேன்.' உறவினர் உரையையும் உறவையும் உதறினேன். எனக்கெனத் தேடிய மணாளனை மணக்கேன் என்று மன்றாடினேன்; வெற்றியும் பெற்றேன். இத்துயரத்தினால் உடல் மெலிந்த என் தந்தை சிலநாட்களில் உலகைவிட்டு அகன்றார்.

நான் உபாத்தினியாக வேலைசெய்துவந்த ஊர் ஒரு சிறிய ஊர். அங்கு என் தாய், இளந் தங்கைகள் இருவர் எல்லோரும் ஒருவாறு காலந்தள்ளி வந்தோம். என் வயதும் மணிக்கணக்கில் அதிகரித்து ஆண்டுகளாக மாறியது. நானும் சில நாட்களுக்குப் பின் ஒரு நகரத்திற்கு மாற்றப்பட்டேன். இப்போதுதான் மன்மதன் செயல்களை உணரத் தலைப்பட்டேன். இவ்வுலகப் போர் காரணமாகப் பொருள்களின் விலையும் அதிகரித்து இருக்கிறது. என் ஊதியம் என் உடைக்கே போகியதாக இல்லை. இப்போது நமக்கு ஓர் ஆண் உதவி இருந்தால் நலமாயிருக்குமென்று எண்ணினேன். பொருளும், இன்பமும் பொருந்திவாழ அவாவினேன். என் உள்ளத்தில் பழைய நினைவுகள் மாறின. உறவினர் உதவுவார்களா என எனது உள்ளம் அஞ்சிற்று. எனினும் எனது கருத்தை வெளியிட என் தாய் மாமனை அணுகினேன். முன் சொன்ன புத்திமதிகளைக் கட்டிநடந்தேன் ஆகலால் அவர் தற்போது என்னைக் கண்டு பேச மறுத்துவிட்டார். வெட்கித் தலை குனிந்து வீடு திரும்பினேன். இதை என் தாயிடம் முறையிட்டேன்.

நாங்கள் குடியிருந்த வீட்டுக்காரர் மிகவும் நல்லவர். அவருக்கு ஒரே ஒரு புதல்வர்; கல்லூரிக் கல்விபயின்றவர்; அரசாங்க வேலையில் இருப்பவர். மாதந்தோறும் வாடகைக்கு அவரே எங்களிடம் வருவார். வரும்போதெல்லாம் என் தாயிடம் குடும்பச் செய்திகளைப்பற்றிப் பேசிவிட்டுப் போவது வழக்கம். நான் என் மாமனால் இகழப்பட்டு வீடுதிரும்பிய மறுநாள், அவர் என் வீட்டுக்கு வரநேர்ந்தது. என் முகம் வாடியிருப்பதைக் குறித்துப் பேச்சுக்கள் நிகழ்ந்தன. கபடமற்றவளாகிய என் அன்னை எங்கள் நிலையை உள்ளபடி கூறிவிட்டாள். அன்றுமுதல் அவர் எங்கள் வீட்டிற்கு அடிக்கடி வரத்தொடங்கினார். பற்பல பேச்சுக்களும் பேசத் தலைப்பட்டார். என்னையும் அறியாமல் அவர்மேல் எனக்கு ஒரு கசப்பு ஏற்பட்டது. அவரை மணாளராக அடைந்து இல்லறம் நடத்துவது எனக்கு விருப்பம்தான். எனினும் அவர் முன்பே மணமானவர்.

அவர் மனைவி ஓர் இளம்பெண். நல்ல அழகும், அழகுக்கு ஏற்ற குணமும் வாய்ந்தவள். இசைப்பயிற்சியில் இணையற்றவள். அவரை மணந்து அவ்வுத்தமியின் வாழ்நாளை வீணாளாக்கி, மறு தாரமென்று மனக்கசப்புடன் வாழ என் மனம் சம்மதிக்கவில்லை. அன்றியும், இத்தகைய நன்மனைவி இருக்க அயல்மகளிரை விரும்பும் மதிகேடராகிய இவரை மணந்தால் நம் கதி யாதாகுமோ என அஞ்சினேன்.

என்போன்ற ஆசிரியைகள் என் உணர்ச்சியைத் தூண்டினர். என் வீட்டின் சொந்தக்காரரும் பலவித சூழ்ச்சிகளைக் கையாண்டார். பலிக்காமையால், என்னைப்பற்றிப் பிறர்பால் பலவாறாக இழித்துக் கூறலானார். இதன்விளைவாக என் கற்பை அழிக்கப் பல சதிகள் செய்யப்பட்டன. ஆசிரியைத் தொழில் நடத்துபவருக்குக் கற்பு என்பது உண்டா என இழித்துக் கூறினர் பலர். இத்தொழிலில் ஈடுபட்டால் ஏனைய ஆசிரியர்கட்கும், ஊரிலுள்ள செல்வர்கட்கும், கல்வி அதிகாரிகட்கும் அன்பாய் நடந்துகொள்ள வேண்டாமா என வம்புபேசினர் பலர். இவற்றிற்கு எல்லாம் மனம்வாடி இருந்தேன்.

நவீன நங்கையரின் நாகரிக அலங்கோலங்களைக் கண்டு மகளிர் உறவே வேண்டாமென்று மருண்ட மணிவண்ணன் என்னை ஒருநாள் கண்டார். நாளடைவில் என் நடத்தைகளைக் கூர்ந்துணர்ந்து என் தூய்மையை அறிந்தார். யானே அவர்க்கேற்ற ஆருயிர்த்துணை என என்னைப் போற்றவிரும்பினார். ஆடவருறவை அறவெறுத்த என்னைக் கண்டபின்புதான் பழமை மாறாத பெண்கள் தற்காலத்திலும் இருக்கின்றார்கள் என்று அவர் அறிய வந்தார். நானும் அவரைக்கண்டபிறகே, ஆண்களிலும் நவீனத்தில் நாட்டமற்ற நல்லவர்கள் உண்டென் றுணர்ந்தேன். எம் இருவர் மனமும், கொடுப்பாரும் அடுப்பாருமின்றி ஒன்றுபட்டு விட்டது. இதுவே எங்கள் மனத்திற் கிசைந்த பழந்தமிழ் மணம்.

இனி, என் வாழ்வு இனிமையாகுக! என்போன்ற இளம் பெண்கள் பருவம்வந்ததும் தங்கள் மனத்திற்கிசைந்த மணாளரின் மணம்பெற்று, உற்றார் உறவினர் உளங்கோணாமல் இனிது வாழ்வார்களாக!

பெண்களால் இப்பேருலகம் பெருமை பெறுக!

அம்மா கேள்!

திரு. அ. கி. பரந்தாமனார் அவர்கள், சென்னை.

ஊருக்கு நல்லது செய்ய
உங்களைப் பழக்குங்கள் அம்மா!
யாருக்கும் கோயில்லை ஊரில்
எல்லோரும் இதைச்செய்தால் அம்மா! (1)

சுத்தமாய் வைத்திடு வீட்டை:
சுகமாக வாழலாம் அம்மா!
செத்திடச் செய்திடும் ஈக்கள்:
சேர்க்காதே குப்பையை அம்மா! (2)

தேங்கிடச் செய்யாதே நீரை:
தேங்கிடில் கொசுவரும் அம்மா!
ஈங்கிது வந்திடில் காய்ச்சல்
எவரையும் கொன்றிடும் அம்மா! (3)

தெருவினைச் சுத்தமாய் வைத்தால்
தெய்வமே வந்திடும் அம்மா!
தெருவொடு வீடுநன் றானல்
தெய்வலோகம் இதுவென்பம் அம்மா! (4)

உடம்பினைக் கெடுத்திடும் ஈயம்:
உள்ளமண் சட்டியே நல்லதம்மா!
திடமாக இருக்கிட நினைத்தால்
தேடிடு மண்சட்டி அம்மா! (5)

சாக்கடைப் பக்கத்தில் விற்கும்
சகலமும் வாங்காதே அம்மா!
நோய்க்கிடம் அதுவென்று தெளிவாய்!
நோன்பாக அதைக்கொள்வாய் அம்மா! (6)

நாட்டுக்குச் செல்வங்கள் நீங்கள்
நல்வாழ்வும் அளிப்பவர் நீங்கள்
காட்டிடும் இவ்வழி நடந்து
கண்கண்ட தெய்வமாய் வாழ்க நீ அம்மா! (7)

மதிப்புரை.

வாரவழிபாட்டுப் பாமாலை.

தொகுத்தோர்: வடார்க்காடு ஜில்லா மாஜி கல்வித் தலைவர், திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் B.A., L.T, M.E.S.

வெளியிட்டோர்: திரு. ந. இராஜகோபாலன், மேல்சான்றூர் குப்பம், ஆம்பூர், (வ. ஆ)

கிடைக்குமிடம்: நித்திய ஜீவிய சங்கம், மேல்சான்றூர்குப்பம், ஆம்பூர், (வ. ஆ.) விலை அணு 0—8—0.

இது, லிங்கில் டெம்மி 1/8 அளவில் 46 பக்கங்களுக்கு நல்ல தாள்களில் அழகாகப் பதிப்பிக்கப்பெற்றுளது.

இந்நூல், சிவபெருமான், உமையம்மை, முருகன், திருமால் முதலிய மூர்த்தங்களை மதப்பிணக்கின்றித் துதிக்கும் சமயப் பெரியார்களின் அருட்பாக்களும், பிறவும் அமைந்துள்ளது.

சைவமுந் தமிழுந் தழைக்க உழைக்குந் தண்ணளியாளராய், கல்வித் துறைகட்கொரு கொழுகொம்பென மன்னி, ஆங்காங்கு வாரவழிபாட் டொழுக்கத்தை வற்புறுத்தி நிலை பெறுத்தும் பெருந்தகையாளராகிய திரு. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள், நம்மவர்களும் கிறிஸ்தவர், மகம்மதியர் முதலிய பிறமதத்தினர்போல் ஒரு வரம்பிற்குட்பட்ட வழிபாட்டினராக இருத்தல்வேண்டும் என்னும் நன்னோக்குடன் தொகுத்த இந்நூல், தமிழுலகம் வரவேற்றுப் போற்றத்தக்கதாம். திரு பிள்ளையவர்களின் நன்முயற்சியால் நமக்கு இன்னபல நன்மைகள் மேன்மேலும் விளையும்வண்ணம் திருவருளை இறைஞ்சுகின்றோம்.

இதனை வெளியிடும் திரு. ந. இராஜகோபாலன் அவர்கள், இளமையும் வளமையும் சிறந்தவராய் நம் நாட்டின் பொதுத் தொண்டில் பேரார்வம் பூண்டு இப்பணியை மேற்கொண்டமை பற்றிப் பெரிதும் மகிழ்கின்றோம். இந்நூலின் ஈற்றிலுள்ள தனிப் பாட்டுகள் இவரால் சேர்க்கப்பெற்றவை. இவர் இத்தகைய முயற்சிகளில் தலைசிறந்து நலம்பெற்று வாழ்வாராக!

ஆசிரியன்.

தமிழணங்கு வெளியீடு எண்—க.

ஸ்ரீ கரபாத்ர அவதூத

பொன்னம்பல சுவாமிகள்

சரித்திரச் சுருக்கமும், போற்றிப் பாமாலையும்.

தமிழணங்காசிரியரால் இயற்றப்பெற்றவை. [விலை 0—4—0.]

கிடைக்குமிடம் :—

(1) சுவாமிகள் திருமடாலயம்,
பழைய வாணியம்பாடி, N. A. Dt.

(2) ஆசிரியர், "தமிழணங்கு",
தமிழரண், ஆம்பூர், N. A. Dt.

தமிழணங்கு நூல்நிலையம், தமிழரண், ஆம்பூர், N. A.

புத்தக விலைப் பட்டி.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் எழுதிய உபதேச மொழிகள், மெல்லிய அட்டை	2	4	0
கனத்த அட்டை	2	12	0
ஸ்ரீ ராமகிருஷ்ண சரிதம்	0	12	0
ஸ்ரீ சாரதாதேவி சரிதம்	0	12	0
சுவாமி விவேகாநந்த சரிதம்	1	0	0
இராஜயோகம்	1	12	0
பக்தியோகம்	0	14	0
கருமயோகம்	1	0	0
திருக்கயிலாய யாத்திரை	1	2	0
திருக்கேதார யாத்திரை	1	12	0
நமது தாய்நாடு	1	0	0
சுவாமி பிரம்மாநந்தர் அருளிய ஞானோபதேசம்	1	0	0
ஸ்ரீ ராமகிருஷ்ண வசனாமிர்தம்	2	0	0
எல்லாவற்றிலும் இறைவனைக் காணல்	0	3	0
பவாஹாரி பாபா	0	3	0
முக்தி நெறி	0	2	0
சுவாமி விவேகாநந்தர்	0	3	0
சிவஸஹஸ்ர நாமம்	0	4	0
விஷ்ணு ஸஹஸ்ர நாமம்	0	4	0
ஸ்ரீ ராமகிருஷ்ண அருள்வாக்கு	0	2	0
ஸ்ரீ விவேகாநந்த அருள்வாக்கு	0	2	0
ஸ்ரீ சாரதாதேவி அருள்வாக்கு	0	2	0
ஸ்ரீ புத்தர் அருள்வாக்கு	0	2	0
விதிவசம் அல்லது ஊழ்வினை	0	1	0
மரணத்துக்கு முன்னும் பின்னும்	0	1	0

பிற தமிழ் நூல்களும் விலைக்குக் கிடைக்கப்பெறும்.

Edited, Printed and Published by A. M. Sivagnanam,
at Sri Saraswathi Press, Ambur, N. A. Dt.